

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100
1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 176 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – தை 23 – செவ்வாய்க்கிழமை 06 பிப்ரவரி 2024 – திருச்சி ★ ★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 176 : Thiruvalluvar Year - 2055 - Thai 23 - Tuesday 06 February 2024 - Trichy ★ ★ 10 Pages ₹ 5.00


## நாடாளுமன்றத் தேர்தல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனைப்படி – தொகுதிப் பங்கீடு குறித்து கழகக் குழுவுடன்

# ம.தி.மு.க. - மார்க்சிஸ்ட் கட்சியினர் பேச்சுவார்த்தை !



தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்ப்பதற்காக ஸ்பெயின் நாட்டிற்கு அரசு முறைப் பயணம் மேற்கொண்டுள்ள தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமிழ்நாட்டில் பட்ஜெட் கூட்டத்தொடர் வரும் 12ஆம் தேதி ஆளுநர் உரையுடன் துவங்க உள்ளதாலும், அதனைத் தொடர்ந்து நிதி நிலை அறிக்கை 19ஆம் தேதி தாக்கல் செய்யப்பட உள்ளதாலும், ஆளுநர் உரையின் வரைவில் இடம் பெற வேண்டிய முக்கிய விவரங்கள் மற்றும் நிதிநிலை அறிக்கை ஆகியவை குறித்து நிதித் துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், வளர்ச்சி ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்களுடன் நேற்று முன்தினம் (4.2.2024) காணொலி வாயிலாக ஆலோசனை மேற்கொண்டார்.

## கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையில் நடைபெற்றது!

**சென்னை, பிப்.6 -**

**நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு கழக பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் தலைமையிலான பேச்சு வார்த்தைக் குழுவினருடன் ம.தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட், ஆகிய கட்சியினர் நேற்று முன்தினம் தொகுதி பங்கீடு குறித்து பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தை சுமூகமாக இருந்ததாக இரு கட்சி நிர்வாகிகளும் தெரிவித்தனர்.**

நாடாளுமன்றத் தேர்தல் வரும் ஏப்ரல், மே மாதங்களில் நடைபெற உள்ளது. தேர்தலைச் சந்திக்கும் வகையில் தி.மு.க. கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தையை தி.மு.க. தொடங்கியுள்ளது. கூட்டணியில் இடம் பெற்றுள்ள காங்கிரசுடன் கடந்த 28-ஆம் தேதி தொகுதி பங்கீடு தொடர்பாக முதல்கட்ட பேச்சுவார்த்தையை தொடங்கியது.

பேச்சுவார்த்தையில் பங்கேற்ற காங்கிரஸ் தலைவர் கே. எஸ்.அழகிரி, “பேச்சுவார்த்தை மிகவும் திருப்திகரமாக இருந்தது. மேற்கொண்டு பேசவேண்டிய விஷயங்களை வெகு விரைவில் பேசுவோம்” என்று தெரிவித்தார்.

தொடர்ந்து வருகிற 9-ஆம் தேதி காங்கிரசுடன் தி.மு.க. 2-ஆம் கட்ட பேச்சுவார்த்தை நடத்த உள்ளது. தொடர்ந்து வருகிற 13-ஆம் தேதி காங்கிரஸ் தேசிய தலைவர் மல்லிகார்ஜுன கார்கே சென்னை வருகிறார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து பேசுகிறார். அப்போது இரு கட்சிகளுடனான தொகுதி பங்கீடு இறுதி செய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்த நிலையில் தி.மு.க. - இந்திய கம்யூனிஸ்ட் கட்சி இடையிலான முதல்கட்ட பேச்சுவார்த்தை சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முன்தினம் நடந்தது. பேச்சுவார்த்தைக்குப் பின்னர் அக்கட்சியின் சுப்பராயன் எம்.பி. “தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை மிக நன்றாக இருந்தது. முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வருகிற 7-ஆம் தேதி சென்னை வருகிறார். அவர் வந்த பின்னர் தேதியை தீர்மானித்து அடுத்தக்கட்ட பேச்சு வார்த்தை தொடங்கும்” என்றார்.

**மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்!**

தொடர்ந்து நேற்று முன்தினம் காலை தி.மு.க. - மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இடையிலான முதல்கட்ட பேச்சுவார்த்தை சென்னை - அண்ணா அறிவாலயத்தில் நடந்தது. தி.மு.க. பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் தலைமையிலான; அமைச்சர்கள் கே.என்.நேரு, ஐ.பெரியசாமி. எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், துணை பொதுச் செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.ராசா, கொள்கை பரப்பு செயலாளர் திருச்சி சிவா ஆகியோர் அடங்கிய குழுவுடன் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்த மத்தியக்குழு உறுப்பினர்கள் பி.சம்பத், பெ.சண்முகம், மாநில செயற்குழு உறுப்பினர்கள் என்.குணசேகரன், கனகராஜ் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினர், “தி.மு.க.வுடன் தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை சுமூகமாக இருந்தது. கூடுதல் தொகுதிகளில் போட்டியிட கோரிக்கை வைத்துள்ளோம்” என்று தெரிவித்தனர்.

**ம.தி.மு.க.**

தொடர்ந்து தி.மு.க. - ம.தி.மு.க. வுடனான பேச்சுவார்த்தை நடைபெற்றது. தி.மு.க. தொகுதி பங்கீட்டு குழுவினருடன் ம.தி.மு.க. அவைத் தலைவர் ஆடிட்டர் ஆ.அர்ஜுனராஜ், பொருளாளர் செந்திலதிபன், அரசியல் ஆய்வு மைய செயலாளர் ஆவடி அந்திரிதாஸ், தேர்தல் பணிச் செயலாளர் வி. சேஷன் ஆகியோர் பேச்சுவார்த்தை நடத்தினர்.

### குடிசைவாழ் மாணவிகளுக்கும்

## தன்னம்பிக்கை தரும் ‘புதுமைப் பெண்’ திட்டம்!

சென்னை, பிப். 6-

ஓலைக் குடிசைகளில் உள்ள சிறிய துவாரங்கள் வழியே கதிரவனின் ஒளிக் கதிர்கள் ஒரு குழல்போல் உள்ளே பாய்வதைப் பார்த்திருப்போம்.

அதுபோல, தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் அவர்களுடைய கருணை பொங்கும் ஆட்சியில் உதயசூரியனின் ஒளிக் கதிர்கள் இங்கே இடம்பெற்றுள்ள குடிசைக்குள் ஊடுருவிப் பாய்ந்து பயனளித்துள்ளது.

இந்தக் குடிசை இருக்குமிடம் ரெங்கநாதபுரம், நடுப்படுகை: குடிசையின் முன்புறத்தில் 100 மீட்டர் தொலைவில் திருமலை ராஜன் ஆறு: மறுபுறம் 400 மீட்டர் தொலைவில் நடாறு. இரண்டு ஆறுகளுக்கும் இடையில் உள்ள படுகையில்தான் இந்தக் குடிசை உள்ளது.

இந்தப் படுகையில் ஏறத்தாழ 35 குடும்பங்கள் உள்ளன. இந்தப் படுகை தஞ்சை மாவட்டம் கும்பகோணத்திற்கு அருகில் உள்ள பட்டீஸ்வரம் பேரூராட்சிக்கு உட்பட்டது. இந்தக் குடிசையில் இருந்து பட்டீஸ்வரம் ஏறத்தாழ நான்கு கிலோமீட்டர் தூரத்தில் உள்ளது.

இந்தப் பகுதியில் உள்ள குழந்தைகள் பட்டீஸ்வரம் அரசு மேல்நிலைப்பள்ளிக்கு நடந்து சென்றுதான் படிக்க வேண்டும். அப்படிச் சென்று படித்து பன்னிரண்டாம் வகுப்பில் (பிளஸ் டூ) தேர்ச்சி பெற்றவர்தான் பூர்ணா.

பூர்ணா, தன் தந்தை பன்னீர்செல்வம், தாய் காமாட்சி, கல்லூரியில் படிக்கும் தம்பி பால சுப்பிரமணியம் ஆகியோருடன் இந்தக் குடிசையில்தான் வாழ்கின்றார். பெற்றோர் இருவரும் விவசாயக் கூலித் தொழிலாளர்கள்.

பள்ளிப்படிப்பை முடித்து ஏறத்தாழ 10 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கும்பகோணம் அரசு மகளிர் கல்லூரியில் சேர்ந்து பி.எஸ்.சி கணிதப் பாடத்தைத் தேர்வு செய்து படித்து வருகிறார். பட்டீஸ்வரத்திலிருந்து பேருந்தில் கல்லூரிக்குச் செல்கிறார்.

இந்தப் பூர்ணாவுக்கு மாதம் ரூ.1,000/ (ரூபாய் ஆயிரம்) வங்கி வழியாக நம் திராவிட நாயகரின் கருணை பொங்கும் புதுமைப் பெண் திட்டத்தால் சென்று சேர்கிறது.

இந்தப் பணம் கிடைத்துள்ளதை எண்ணி மிகுந்த மகிழ்ச்சி அடையும் பூர்ணா, இந்தப் பணம் எனக்குப் பல வழிகளில் பயன்படுகிறது. பேருந்து போக்குவரத்துக்கு, நோட்டுப் புத்தகங்கள் வாங்க பயன்படுகிறது. என் பெற்றோரின் குடும்பச் செலவுக்கும் பயன்படுகிறது.

படிக்கும்போதே சம்பாதிப்பது போன்ற உணர்வு எனக்கு வருகிறது. அதைவிட மனதில் ஒரு தன்னம்பிக்கை பிறக்கிறது. இந்தத் திட்டத்தை உருவாக்கிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இருப்பிடம் நோக்கி என் கரங்கள் குவிந்து நன்றியை செலுத்துகின்றன.

என்னைப் போன்ற இலட்சக்கணக்கான ஏழை மாணவ, மாணவிகளுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஒரு கருணைத் தெய்வமாகவே காட்சி அளிக்கிறார்கள். அவரை நீடூழி வாழ்க வாழ்க என வாழ்த்திக் கொண்டிருக்கிறோம் மாணவிகள் நாங்கள் என்று மனம் நெகிழ்ந்து கூறுகிறார்.

## நீதிபதிகள் அரசியலில் ஈடுபடக்கூடாது !

### உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி பேச்சு!

**புதுடெல்லி, பிப். 6 -**

**நீதிபதிகள் அரசியலில் ஈடுபடக்கூடாது என, உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தெரிவித்துள்ளார்.**

காமன்வெல்த் சட்ட கல்வி சங்கத்தின் காமன்வெல்த் தலைமை வழக்கறிஞர்கள் மற்றும் தலைமை சட்ட ஆலோசகர்கள் மாநாடு டெல்லி விஞ்ஞான் பவனில் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் கலந்து கொண்டு பேசிய உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட், நீதிபதிகள் அரசியலில் ஈடுபடாமல் இருப்பதும், நீதிமன்றங்களில் கண்ணியத்துடன் நடந்து கொள்வதும், சட்ட நடவடிக்கைகளில் நேர்மையை உறுதி செய்வதும் அவசியம் என்று கூறினார்.

தொழில்நுட்பம் நீதிக்கான ஒரு சக்தி வாய்ந்த கருவியாக உருவாகி வருவதை குறிப்பிட்ட டி.ஒய்.சந்திரசூட், அதேநேரம் தொழில்நுட்ப தீர்வுகள் சமத்துவமானதாகவும் அனைவரையும் உள்ளடக்கியதாகவும் இருப்பதை கண்காணித்து உறுதி செய்யவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

### பள்ளிக் கல்வித் துறையில் காலியாக உள்ள

## 2,582 பட்டதாரி ஆசிரியர் பணிக்கான தேர்வு!

### 130 மையங்களில் நடைபெற்றது !

சென்னை, பிப். 6 -

பள்ளிக் கல்வித்துறையில் காலியாக உள்ள 2ஆயிரத்து 582 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கான தேர்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

தமிழ்நாட்டில் அரசு நடுநிலை, உயர்நிலைப் பள்ளிகளில் காலியாக உள்ள ஆசிரியர் பணியிடங்களை நிரப்ப ஆசிரியர் தேர்வு வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது. இதையடுத்து 2ஆயிரத்து 582 பட்டதாரி ஆசிரியர் மற்றும் வட்டார வளமைய ஆசிரியர்களுக்கான போட்டித் தேர்வு அறிவிக்கப்பட்டது. மாநிலம் முழுவதும் 130 மையங்களில் 41ஆயிரத்து 485 பேர் தேர்வை எழுதினர்.

ஜனவரி மாதம் 7ந்தேதி இத்தேர்வு நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டு இருந்தது. அதற்கான ஹால் டிக்கெட் இணையதளம் மூலம் டிசம்பர் மாதம் வழங்கப்பட்டது. ஆனால் டிசம்பர் மாத இறுதியில் தென் மாவட்டங்களில் பெய்த கன மழையால் பட்டதாரி ஆசிரியர்கள் தேர்வு பிப்ரவரி 4ந்தேதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### நாடாளுமன்றத் தேர்தல் :

## தி.மு.க. தேர்தல் அறிக்கைக் குழுவினர் சுற்றுப்பயணம்!

### தூத்துக்குடியில் பல்வேறு தரப்பினரைச் சந்தித்தனர் !

சென்னை, பிப்.6-

நாடாளுமன்ற தேர்தல் அறிக்கை தயாரிக்கும் தி.மு.க. குழுவினர் மேற்கொள்ள உள்ள, சுற்றுப்பயணத்தை தி.மு.க. தலைமைக்கழகம் அறிவித்துள்ளது. நேற்று தூத்துக்குடியில் இருந்து தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு தனது சுற்றுப் பயணத்தை தொடங்கியது.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் அறிவுரைப்படி நாடாளுமன்ற தேர்தலுக்கான, தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு, தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் நேற்று முதல் சுற்றுப் பயணம் மேற்கொண்டது. இந்தக்குழுவினர் வணிக சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், கல்வியாளர்கள், மாணவர் அமைப்புகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை நேரில் சந்தித்து தி.மு.க. தேர்தல் அறிக்கையை தயாரிக்க உள்ளனர்.

அதன்படி, தூத்துக்குடியில் நேற்று சுற்றுப்பயணம் மேற்கொண்டு பல்வேறு தரப்பினரைச் சந்தித்தனர். மேலும் கன்னியாகுமரியில் இன்று (பிப்ரவரி 6 ஆம் தேதியும்), மதுரையில் நாளை (பிப்ரவரி 7 ஆம் தேதியும்) சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளது.

தஞ்சையில் பிப்ரவரி 8 ஆம் தேதியும், சேலத்தில் பிப்ரவரி 9 ஆம் தேதியும், கோவையில் பிப்ரவரி 10 ஆம் தேதியும் தி. மு.க. தேர்தல் அறிக்கை குழுவினர் சுற்றுப்பயணம் மேற்கொள்ள உள்ளனர்.

திருப்பூரில் பிப்ரவரி 11 ஆம் தேதியும், ஒசூரில் பிப்ரவரி 16 ஆம் தேதியும், வேலூரில் பிப்ரவரி 17 ஆம் தேதியும் தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிப்பு தொடர்பாக ஆலோசனை நடத்த உள்ளது.

இதேபோன்று, ஆரணியில் பிப்ரவரி 18 ஆம் தேதியும், விழுப்புரத்தில் பிப்ரவரி 20 ஆம் தேதியும், சென்னையில் பிப்ரவரி 21,22 மற்றும் 23 ஆம் தேதிகளில், நாடாளுமன்ற தேர்தலுக்கான தி.மு.க. தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 06-02-2024

# ஜார்கண்டில் ஒரு சதிச்செயல்

ஜார்கண்டில் ஒரு ஜனநாயகப் படுகொலையை நடத்தி இருக்கிறது பா.ஜ.க. இது எதற்குமே தொடர்பு இல்லாதவரைப் போல இருக்கிறார் பிரதமர் நரேந்திரமோடி!

மக்களை நேரிய வழியில் சந்தித்து வாக்குகளைப் பெற முடியாத பா.ஜ.க., பல்வேறு மாநிலங்களில் குறுக்கு வழியில், கொல்லைப்புறம் வழியாக ஆட்சியைப் பிடித்துள்ளதை அதிகம் விவரிக்கத் தேவையில்லை. நாடும் நாட்டு மக்களும் அறிந்தவை தான் அவை. கட்சிகளை உடைப்பது, எம்.எல்.ஏ.க்களை இழுப்பது அதன் மூலமாக பா.ஜ.க. ஆட்சியையோ, அல்லது பா.ஜ.க.வின் அடிமை ஆட்சியையோ அமைப்பது அவர்களது பாணியாகும். அதனைத்தான் ஜார்கண்டிலும் பார்க்க நினைத்தார்கள். ஆனால் அது நடக்கவில்லை.

**நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கி வருகிறது. தனக்கு எதிரியே இல்லை என்ற இறுமாப்புடன் செயல்பட்டு வந்தது பா.ஜ.க. ஆனால் 'இந்தியா' என்ற வலுவான கூட்டணியை அமைத்து விட்டார்கள் எதிர்க்கட்சிகள். இதில் அகில இந்தியக் கட்சிகள், பல்வேறு மாநிலக் கட்சிகள் இடம் பெற்றுள்ளன. பா.ஜ.க.வை வீழ்த்த வேண்டும் என்ற இலட்சியத்துடன் இக்கட்சிகள் ஒன்று சேர்ந்துள்ளன. 'இந்தியா' என்று கூட்டணிக்கு பேர் வைத்ததே பா.ஜ.க.வுக்கு திகிலைக் கிளப்பியது. 'இந்தியா' என்று சொல்லாமல், 'பாரதம்' என்று புலம்பத் தொடங்கினார்கள்.**

அடுத்ததாக இந்தியா கூட்டணித் தலைவர்களை வேட்டையாடத் தொடங்கினார்கள். ஆம் ஆத்மி கட்சித் தலைவரும் டெல்லி முதலமைச்சருமான அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு சம்மன் மேல் சம்மனாக கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். டெல்லி கலால் கொள்கை வழக்கு தொடர்பாக முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு இது வரை 5 முறை சம்மன் அனுப்பி இருக்கிறார்கள். 5 சம்மனையும் அரவிந்த் கெஜ்ரிவால் புறக்கணித்தார். அவரது ஆட்சியைக் கவிழ்க்கும் வேலைகளை பா.ஜ.க. தொடங்கி விட்டது. இதனை அரவிந்த் கெஜ்ரிவாலே ஊடகங்களில் அம்பலப்படுத்தினார்.

**'ஆம் ஆத்மி கட்சியில் இருந்து வெளியேறவும், டெல்லியில் உள்ள ஆம் ஆத்மி கட்சி ஆட்சியைக் கவிழ்க்கவும் எங்கள் கட்சி எம்.எல்.ஏ.க்கள் ஏழு பேருக்கு தலா 25 கோடி ரூபாய் தர பா.ஜ.க. பேரம் பேசி உள்ளது. ஆபரேஷன் தாமரை 2.0 என்ற திட்டத்தை தொடங்கி இருக்கிறார்கள்' என்று டெல்லி முதலமைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் பகிரங்கமாகக் குற்றம் சாட்டினார். இந்த எம்.எல்.ஏ.க்களின் பெயர்களை வெளியிடுங்கள் என்று அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறார்கள். டெல்லி காவல் துறையின் குற்றப்பிரிவு போலீஸார், நோட்டீஸ் கொடுத்து இருக்கிறார்கள்.**

பீகாரில் துணை முதலமைச்சராக இருந்த தேஜஸ்வியை பல்வேறு வகைகளில் நெருக்கி வருகிறார்கள். இதன் தொடர்ச்சியாக ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா தலைவரும் ஜார்கண்ட் முதலமைச்சருமான ஹேமந்த் சோரனை வளைத்தார்கள்.

அரசு நிலங்களை தனியாருக்கு விற்றதான ஒரு வழக்கை அமலாக்கத்துறை மூலமாக தூசி தட்டி எடுத்து அவரை விசாரணைக்கு வருமாறு அழைத்தது அமலாக்கத்துறை. தன்னை எப்படியும் கைது செய்யப் போகிறார்கள் என்பதை அறிந்து அவர் தனது முதலமைச்சர் பதவியை விட்டு விலகினார். ஹேமந்த் சோரனைக் கைது செய்து ஜார்கண்டில் முக்தி மோர்ச்சா ஆட்சியைக் கவிழ்ப்பதுதான் பா.ஜ.க.வின் சதியாக இருந்தது. ஆனால் கட்சி உறுதியாக ஹேமந்த் பின்னால் நின்று விட்டது. ஹேமந்த் கைது செய்யப்பட்டதும் உடனே கூடிய முக்தி மோர்ச்சா கட்சி தனது அடுத்த முதலமைச்சராக சம்பாய் சோரனை தேர்ந்தெடுத்தது. ஆளுநரிடம் அதற்கான கடிதத்தைக் கொடுத்ததும், அவருக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்திருக்க வேண்டும். முக்தி மோர்ச்சா கட்சி எம்.எல்.ஏ.க்களை உடைக்க முடியுமா என்று பார்த்தார்கள். அதனால் இழுத்தார்கள். ஆனால் எம்.எல்.ஏக்கள் யாரும் அணிமாறத் தயாராக இல்லை. வேறு வழியில்லாமல் சம்பாய் சோரனுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்து விட்டார்கள்.

**81 உறுப்பினர்களைக் கொண்ட ஜார்கண்ட் சட்டசபையில் பெரும்பான்மைக்கு 41 உறுப்பினர்கள் தேவை. 43 உறுப்பினர்கள் ஒன்றாக இருப்பதாக வீடியோவை ஜார்கண்ட் முக்தி மோர்சா கட்சி வெளியிட்டது. கூட்டணியாகப் பார்த்தால் 48 உறுப்பினர்கள் ஆதரவு இந்த அரசுக்கு இருந்தது. ஆனாலும் உடனடியாக ஆட்சி அமைக்க இந்தக் கட்சியை அழைக்கவில்லை.**

பீகாரில் நிதிஷ்குமார் பதவி விலகினார். 15 நிமிடங்களில் புதிய அமைச்சரவையை அமைக்கவும், அதற்கான உரிமை கோரவும் அனுமதிக்கப்பட்டார். இத்தனைக்கும் அவரது கட்சிக்கு பெரும்பான்மை கிடையாது. பா.ஜ.க. ஆதரவு தந்தால் பெரும்பான்மை ஆகும். ஆனால் ஜார்கண்டில் முக்தி மோர்சா கட்சி பெரும்பான்மை உள்ள கட்சி ஆகும். ஆனால் அவர்களது ஆட்சியை அமைக்க கால அவகாசகத்தை நீட்டித்து - பா.ஜ.க.வின் ஜனநாயக விரோத விளையாட்டுகளை விளையாட நேரம் கொடுத்தார் ஆளுநர். பா.ஜ.க. நினைத்தது நடக்கவில்லை. வேறு வழியின்றி சம்பாய் சோரனுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்து விட்டார் ஆளுநர்.

**ஜார்கண்ட் முதலமைச்சராக இருந்த நிலையில் ஹேமந்த் சோரனை பதவி விலக வைத்து அமலாக்கத்துறை மூலமாக கைது செய்ய வைத்திருப்பது மாபெரும் ஜனநாயகப் படுகொலை ஆகும். தாங்கள் ஏதோ ஊழலுக்கு எதிரானவர்கள் போலக் காட்டிக் கொள்கிறது பா.ஜ.க. மகாராஷ்டிராவில் 73 ஆயிரம் கோடி ஊழல் புகாரில் சிக்கிய அஜித் பவார், பா.ஜ.க. ஆதரவுடன் துணை முதலமைச்சராக இருக்கிறார். பா.ஜ.க.வில் சேர்ந்ததும் அவர் புனிதராகி விட்டார். இப்படித்தான் ஹேமந்த் சோரனையும் மிரட்டப் பார்க்கிறார்கள்.**

நாடாளுமன்றத் தேர்தல் நடந்து, பா.ஜ.க. ஆட்சி முடியும் வரை இது போன்ற சதிச்செயல்கள் நிறைய நடக்கும்.

●●



நாடாளுமன்றத் தேர்தலுக்கு கழகத்தினரைத் தயார்படுத்தும் விதமாக, கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் அமைத்துள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கான கழக மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவினரான – கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு, கழக இளைஞர் அணிச் செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் கடந்த ஒரு வாரமாக தொகுதிவாரியாக கழக நிர்வாகிகளின் தேர்தல் பணிகளை ஆய்வு செய்து, தேர்தல் தொடர்பான அவர்களின் கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கேட்டு வருகின்றனர். இந்தக் கலந்தாலோசனைக் கூட்டங்கள் முடிவடைந்த சூழலில், முதலமைச்சர் அவர்கள், ஸ்பெயின் நாட்டிலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக இக்குழு மேற்கொண்டு வரும் பணிகளின் நிலை, கழக நிர்வாகிகள் கூறிய கருத்துகள், அடுத்தகட்டப் பணிகள் தொடர்பாக பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

## நீலகிரி தாவரவியல் பூங்காவில் சுற்றுலாப் பயணிகள் கூட்டம் அதிகரிப்பு!

உதகை, ஜன. 6–

நீலகிரி மாவட்டம் உதகையில் உள்ள சுற்றுலாத் தலங்களை கண்டு ரசிக்க நாள்தோறும் பல்லாயிரக் கணக்கான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்றனர்.

இந்த நிலையில், விடுமுறை நாளையொட்டி உதகைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை வழக்கத்தை விடவும் அதிகரித்து காணப்படுகிறது. கேரளா, கர்நாடகா உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகள் உதகைக்கு வருகை தந்த வண்ணம் உள்ளனர். தாவரவியல் பூங்காவில் கண்களை கவரும் டேலியா, பேன்சி, சால்வியா மலர்களை கண்டு ரசிக்கும் சுற்றுலாப் பயணிகள், தங்கள் குடும்பத்துடன் புகைப் படம் எடுத்து மகிழ்கின்றனர்.

மேலும், தாவரவியல் பூங்காவில் உள்ள கண்ணாடி மாளிகையில் பத்துக்கும் மேற்பட்ட நிறங்களில் பூத்துக் குலுங்கும் துலிப் மலர்கள் சுற்றுலாப் பயணிகளை வெகுவாக கவர்ந்துள்ளது.






நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கியுள்ள நிலையில், கழக நாடாளுமன்றத் தேர்தல் மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்புக் குழுவின் ஆலோசனைக் கூட்டங்கள் மக்களவை தொகுதி வாரியாக நடைபெற்று வருகின்றன. திருவண்ணாமலை, ஆரணி மக்களவை தொகுதிகளுக்கான ஆலோசனைக் கூட்டம் அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்றது. தொகுதி மேம்பாட்டுப் பணிகளின் தற்போதைய நிலை தொகுதி மக்களின் தேவைகள் தேர்தல் முன்னேற்பாட்டுப் பணிகள் உள்ளிட்டவை குறித்து கழக நிர்வாகிகளிடம் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கேட்டறிந்தார். மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய பகுதி நகர பேரூர்க் கழக நிர்வாகிகள், மாவட்டக் கவுன்சிலர்கள் உள்ளிட்ட உள்ளாட்சிப் பிரதிநிதிகள் இதில் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாட்டை விளையாட்டின் தலைநகரமாக்கும் வகையில்

## பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார் முதல்வர்!

### புதுக்கோட்டையில் அமைச்சர் எஸ்.ரகுபதி பேச்சு!

புதுக்கோட்டை, பிப்.6 -

புதுக்கோட்டை மௌண்ட் சியோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 3வது மாநில அளவிலான 14 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான குடியரசு தின குழு விளையாட்டுப் போட்டிகளை, சட்டம், நீதிமன்றங்கள், சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்பு சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி 02.02.2024 அன்று தொடங்கி வைத்து வீரர், வீராங்கனைகளுடன் டேபிள் டென்னிஸ் விளையாடினார்கள்.

பின்னர் அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தை விளையாட்டின் தலைநகரமாக்கும் வகையில் பல்வேறு வகையான திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில், விளையாட்டிற்கு தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டு அரங்கங்களை மேம்படுத்தி வருகிறார்கள்.

மேலும் உலக தரத்திலான பல்வேறு வகையான போட்டிகளை தமிழகத்தில் நடத்தி தமிழகத்திற்கு பெருமைச் சேர்த்துள்ளார்கள். அதன்படி, 3வது மாநில அளவிலான 14 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான குடியரசு தின குழு விளையாட்டுப் போட்டிகள் புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடங்கி வைக்கப்பட்டது.

மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களும், விளையாட்டுத் துறைக்கு அளித்து வரும் உற்சாகத்தின் காரணமாக நடந்து முடிந்த, அகில இந்திய பள்ளிகள் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற தேசிய விளையாட்டுப் போட்டிகளில் தமிழகம் அதிக எண்ணிக்கையிலான பதக்கங்களை பெற்று 3ஆம் இடம் பிடித்து பெருமைச் சேர்த்துள்ளது.

மேலும் தமிழகத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா இளைஞர் விளையாட்டு போட்டிகளில் தமிழகத்தை சேர்ந்த வீரர், வீராங்கனைகள் சிறப்புடன் பங்கேற்று அதிக அளவிலான பதக்கங்களை பெற்று 2ஆம் இடம் பிடித்துள்ளனர். இதன் காரணமாக விளையாட்டில் ஆர்முடைய மாணவ, மாணவிகள் தாங்கள் தொடர்ந்து சிறப்பாக விளையாடி அதிக அளவிலான வெற்றிகளை பெற உற்சாகம் அளிக்கும்.

அந்தவகையில் 3வது மாநில அளவிலான 14 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான குடியரசு



தின குழு விளையாட்டுப் போட்டிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளன.

இது புதுக்கோட்டை மாவட்டத்திற்கு கிடைத்துள்ள மிகப் பெரிய பெருமையாகும். கல்வி, கலை ஆகியவற்றை உற்சாகப்படுத்துவது போல் விளையாட்டுத் துறையில் ஈடுபடுவோர்களையும் உற்சாகப் படுத்தி அவர்கள் மாவட்ட, மாநில மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற ஊக்கப்படுத்திட வேண்டும்.

எனவே மாணவ, மாணவிகள் அனைவரும் கல்வியுடன் சேர்ந்து விளையாட்டிலும் தங்களது ஆர்வத்தினை காண்பித்து சிறப்பானதொரு எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள வேண்டும் என அமைச்சர் எஸ்.ரகுபதி தெரிவித்தார்.

இந்த 3வது மாநில அளவிலான 14 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான குடியரசு தின குழு விளையாட்டுப் போட்டிகள் 02.02.2024 முதல் 07.02.2024 வரை புதுக்கோட்டை முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி மாவட்ட விளையாட்டரங்கில், கால்பந்து, ஹாக்கி, கூடைப்பந்து, கையுந்து பந்து, கோகோ, கபாடி. கைபந்து, இறகுபந்து, மேசைப்பந்து, டென்னிஸ், எறிபந்து, பூப்பந்து உள்ளிட்ட விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளன. இப்போட்டிகளில் வெற்றி பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு கோப்பைகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில், புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் மா.செல்வி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் எம்.மஞ்சுனா, நகரமன்றத் தலைவர் திலகவதி செந்தில், புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாவட்ட விளையாட்டு அலுவலர் செந்தில் குமார், மாநில முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் சி.நிர்மலாதேவி, மாவட்ட உடற்கல்வி ஆய்வாளர் ரெ.தங்கராஜு, மாவட்ட சுற்றுச்சூழல் ஒருங்கிணைப்பாளர் சாலை செந்தில், பள்ளித்துணை ஆய்வாளர்கள் வேலுச்சாமி, குரு மாரிமுத்து, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் கலந்துகொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்லாட்சியில் எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி சட்டமன்றத் தொகுதி திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம் குப்பகுடி ஊராட்சியைச் சேர்ந்த அனைத்து பொதுமக்களுக்கும் சிறப்பு பரிசுத் தொகுப்பினை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலைத் துறை அமைச்சர் சிவ.வீ. மெய்யநாதன் வழங்கினார். இந்நிகழ்வில் திருவரங்குளம் மேற்கு ஒன்றியச் செயலாளர் கே.பி. கே.டி.தங்கமணி, பொதுக்குழு உறுப்பினர் ஆர்.வி.செல்வம் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றியக் கழக நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சென்னை – அண்ணா அறிவாலயம் – ‘முரசொலி மாறன் வளாக’க் கூட்ட அரங்கில் – கழகக் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட – கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. அவர்கள் தலைமையிலான – கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஐ.பெரியசாமி, ஆ.இராசா, கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., ஆகியோர் உள்ளிட்ட கழகக் குழுவினருடன் – ம.தி.மு.க. தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக் குழுவினரான ம.தி.மு.க. அவைத் தலைவர் ஆடிட்டர் அர்ஜுனராஜ், பொருளாளர் மு.செந்திலதிபன், அரசியல் ஆய்வு மையச் செயலாளர் ஆவடி இரா.அந்திரிதாஸ், தேர்தல் பணிச் செயலாளர் வி.சேஷன் ஆகியோர் தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தினர்.



சென்னை – அண்ணா அறிவாலயம் – ‘முரசொலி மாறன் வளாக’க் கூட்ட அரங்கில் – நேற்று முன்தினம் கழகக் கூட்டணிக் கட்சிகளுடன் தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தை நடத்த அமைக்கப்பட்ட கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. தலைமையிலான – கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு, கழக துணைப் பொதுச் செயலாளர்கள் முனைவர் க.பொன்முடி, ஐ.பெரியசாமி, ஆ.இராசா, கழகக் கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி சிவா எம்.பி., ஆகியோர் உள்ளிட்ட கழகக் குழுவினருடன் – மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கூட்டணிக் கட்சி தொகுதிப் பங்கீடு பேச்சுவார்த்தைக் குழுவினரான – மார்க்சிஸ்ட் கட்சியின் மத்தியக் குழு உறுப்பினர்கள் பி.சம்பத், பெ.சண்முகம், மாநிலச் செயற்குழு உறுப்பினர்கள் க.கனகராஜ், எச்.குணசேகரன் ஆகியோர், தொகுதிப் பங்கீடு தொடர்பான பேச்சுவார்த்தை நடத்தினர்.

### 24,766 மறு கட்டுமானத் திட்டப் பயனாளிகள் செலுத்த வேண்டிய

# பங்களிப்புத் தொகை ரூ.594.54 கோடியை அரசே ஏற்றுள்ளது!

### தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய குடியிருப்புகளைத் திறந்து வைத்து அமைச்சர் தா.மோ.அன்பரசன் தகவல்!

சென்னை, பிப்.6-

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் நேற்று முன்தினம் (4.2.2024) தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் கட்டப்பட்ட வள்ளீஸ்வரன் கோயில் தோட்டம், ஜோகித் தோட்டம் ஆகிய திட்டப்பகுதிகளில் ரூ.146.19 கோடி மதிப்பீட்டில் 1046 புதிய அடுக்கு மாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார்.

அதன் பின்னர் அமைச்சர் தா.மோ.அன்பரசன் பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கி பேசியதாவது:-

தமிழ்நாட்டில் வாழும் நகர்ப்புற ஏழைக் குடும்பங்களுக்கு அனைத்து வசதிகளையும் உள்ளடக்கிய வீட்டு வசதியினை ஏற்படுத்தி தரும் வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 1970-ஆம் ஆண்டு தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் தொடங்கப்பட்டது.

குடிசைப் பகுதிகளை மேம்படுத்துதல் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் முதன்மையான செயல்பாடாக இருந்தாலும், நகர்ப்புற ஏழைக் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த வீட்டுவசதி வாய்ப்புகள் மட்டுமே போதுமானதாக இருக்காது, அவர்களுக்கு குடிநீர், சுகாதாரம், மின்சாரம், போக்குவரத்து, கல்வி, மருத்துவ வசதி, திடக்கழிவு மேலாண்மை, பொது வெளியிடம் போன்ற போதுமான நகர்ப்புற வசதிகளுடன் வீட்டுவசதி ஏற்படுத்துவது அவசியம் என்று கருதி முதலமைச்சர் அவர்கள் 1.9.2021 அன்று தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரியத்தின் பெயரினை தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் என்று பெயர் மாற்றம் செய்து ஆணையிட்டார்.



குடிசைகளை மாற்றுவது மட்டுமல்ல, குடிசைகளில் வாழும் மக்களுடைய வாழ்வாதாரத்தையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்திட வேண்டும் என்ற எண்ணத்தோடு இந்தப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய வள்ளீஸ்வரன் கோயில் தோட்டம் திட்டப்பகுதி 1970-ஆம் ஆண்டு 270 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 568 குடியிருப்புகள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 410 சதுர அடி கொண்ட வள்ளீஸ்வரன் கோயில் தோட்டம் திட்டப்பகுதியில் 3 கட்டிட தொகுப்புகள் தூண் மற்றும் 9 தளங்களுடன், 1 கட்டிட தொகுப்பு தூண் மற்றும் 11 தளங்களுடன் 87 கோடியே 53 இலட்சம் ரூபாய் செலவில் 630 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

ஜோகித் தோட்டம் திட்டப்பகுதி 1982-ஆம் ஆண்டு 230 சதுர அடியில் தரை மற்றும் 3 தளங்களுடன் கட்டப்பட்ட 256 குடியிருப்பு கள் சிதிலமடைந்து வாழத் தகுதியற்ற நிலையில் இருந்தது. அப்பழைய குடியிருப்புகளை அகற்றி 58 கோடியே 66 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 417 சதுர அடி கொண்ட ஜோகித் தோட்டம் திட்டப் பகுதியில் தூண் மற்றும் 13 தளங்களுடன் 416 புதிய அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன.

இன்றைய தினம் திறக்கப்பட்ட திட்டப்பகுதிகளில் ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, சிறுவர் பூங்கா, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு, தெரு விளக்குகள் மற்றும் தீயணைப்பு வசதிகள் போன்ற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 2 திட்டப்பகுதிகளும் சேர்த்து மொத்தம் 146 கோடியே 19 இலட்சம் ரூபாய் செலவில் 1046 குடியிருப்புகளை திறந்து வைத்து, பயனாளிகளுக்கு குடியிருப்பு களுக்கான ஒதுக்கீடு ஆணைகள் வழங்கப்பட்டன.

இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 72 திட்டப்பகுதிகளில் 2544.19 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 23259 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

மேலும் மறுகட்டுமான திட்ட பயனாளிகளின் பங்களிப்பு தொகை ரூ.5 இலட்சம் முதல் 6 இலட்சமாக இருந்தது. மறுகட்டுமான திட்ட பயனாளிகளின் சிரமத்தை அறிந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தாய் உள்ளத்தோடு பரிசீலித்து அவர்களது பங்களிப்பு தொகையை குறைக்க வேண்டும் என்பதற்காக மறுகட்டுமான திட்டப்பகுதிகளில் மேற்கொள்ளப்படும் சாலை வசதிகள், மழைநீர் வடிகால், தெரு விளக்குகள், பொது வசதி கட்டிடங்கள் போன்ற அடிப்படை வசதிகளுக்கு ஏற்படும் செலவுகளை அரசே ஏற்கும் என்று அறிவித்தார்.

இவ்வறிப்பினால் பயனாளிகள் பங்களிப்பு தொகை சுமார் ரூ4 இலட்சம் குறைக்கப்பட்டு தற்போது ரூ1.50 இலட்சமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதனால் கடந்த 2.5 ஆண்டுகளில் 24766 குடும்பங்கள் செலுத்த வேண்டிய பயனாளிகள் பங்களிப்பு தொகை ரூ.594 கோடியே 54 இலட்சம் அரசே ஏற்றுள்ளது.

இவ்வாறு அமைச்சர் தா.மோ. அன்பரசன் கூறினார்.

இந்நிகழ்ச்சியில், மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் த.வேலு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசுச் செயலாளர் சி.சமயமூர்த்தி, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர். சு.பிரபாகர், இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர். க.விஜயகார்த்திகேயன், மாமன்ற உறுப்பினர் திருமதி.கீதா முரளி, வாரிய தலைமை பொறியாளர்கள் வே.சண்முகசுந்தரம், அ.மைக்கேல் ஜார்ஜ், மேற்பார்வை பொறியாளர்கள் (பொ) சிவசங்கரன், செந்தாமரை கண்ணன், நிர்வாகப் பொறியாளர் சுந்தர், மற்றும் வாரிய பொறியாளர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாநில உரிமைகள் காத்திட - ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து

‘மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி’யின் சார்பில் 2024 பிப்ரவரி 8ஆம் தேதி அன்று

## மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும்

# “கண்டன ஆர்ப்பாட்டத்தில்”

### கழக நிர்வாகிகள் - தோழர்கள் அனைவரும் கலந்து கொள்வீர்!

## தலைமைக் கழகம் அறிவிப்பு

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுரைப்படி, மாநில உரிமைகள் காத்திட ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்து தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்ட தலைநகரங்களிலும் 2024 பிப்ரவரி 8 (வியாழக்கிழமை) அன்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நடைபெறும் ‘‘கண்டன ஆர்ப்பாட்டத்தில்’’, கழக நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு, ஒன்றிய பா.ஜ.க. அரசிற்கு எதிராக தமது கண்டனக் குரலை எழுப்பிட வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், தத்தமது மாவட்டத்தில் உள்ள மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர்க் கழச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணி நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள உரிய ஏற்பாடுகளை செய்திட வேண்டுமென மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 4-2-2024

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.



தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை முன்னிட்டு அரூர் பேரூர் கழகச் செயலாளர் முல்லை ரவி ஏற்பாட்டில் அரூர் ரவுண்டானாவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர்,முன்னாள் அமைச்சர் முனைவர்.பி.பழனியப்பன் மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தினார். இதில் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

# நாடாளுமன்றத் தேர்தல் 2024

### ‘நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு’ மேற்கொள்ளும்

# விரிவான சுற்றுப்பயணம்

## தலைமைக் கழக அறிவிப்பு

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் வழங்கிய அறிவுரையின்படி, 2024 - நாடாளுமன்ற தேர்தலுக்கான திமுக தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு பிப்ரவரி 5-ஆம் தேதி தொடங்கி தமிழ்நாட்டின் முக்கிய நகரங்களுக்கு திருமிகு. கனிமொழி கருணாநிதி, எம்.பி., அவர்கள் தலைமையில் பயணம் செய்து பல்வேறு தரப்பினர், பொதுமக்கள், கழக நிர்வாகிகளைச் சந்தித்து தேர்தல் அறிக்கைக்கான பரிந்துரைகளைக் கேட்கவிருக்கிறது.

கீழே குறிப்பிட்டுள்ளவாறு மாவட்டக் கழகச் செயலாளர்கள் தேர்தல் அறிக்கைக் குழுவினருடன் தொடர்பு கொண்டு தங்கள் மாவட்டத்திற்குரிய வணிகர் சங்கங்கள், விவசாயிகளின் பிரதிநிதிகள், மீனவ சங்கங்கள், தொழில் முனைவோர், தொழிற்சங்கங்கள், மாணவர் சங்கங்கள், அரசு ஊழியர்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் அழைத்து வந்து தி.மு.க தேர்தல் அறிக்கைத் தயாரிப்புக் குழுவினரைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளை ஒருங்கிணைக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழு கீழ்க்கண்ட அட்டவணைப்படி பயணம் மேற்கொண்டு கழக நிர்வாகிகள், தொழிற்துறையினர், கல்வியாளர்கள், பல்துறை வல்லுநர்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் ஊழியர்கள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும் நேரடியாக சந்திப்பார்கள்.

### தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு விரிவான சுற்றுப் பயண விவரம்

| தேதி | இடம் | கழக மாவட்டம் |
|---|---|---|
| “ பிப்ரவரி-6 | கன்னியாகுமரி | கன்னியாகுமரி கிழக்கு, கன்னியாகுமரி மேற்கு, தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி மத்திய |
| “ பிப்ரவரி-7 | மதுரை | மதுரை வடக்கு, மதுரை தெற்கு, மதுரை மாநகர், சிவகங்கை, தேனி வடக்கு, தேனி தெற்கு, திண்டுக்கல் கிழக்கு, திண்டுக்கல் மேற்கு |
| “ பிப்ரவரி-8 | தஞ்சாவூர் | தஞ்சை வடக்கு, தஞ்சை மத்திய, தஞ்சை தெற்கு, திருவாரூர், நாகை , மயிலாடுதுறை, திருச்சி வடக்கு, திருச்சி தெற்கு, திருச்சி மத்திய, புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு |
| “ பிப்ரவரி-9 | சேலம் | சேலம் கிழக்கு, சேலம் மேற்கு, சேலம் மத்திய, நாமக்கல் கிழக்கு, நாமக்கல் மேற்கு, கள்ளக்குறிச்சி வடக்கு, கள்ளக்குறிச்சி தெற்கு |
| “ பிப்ரவரி-10 | கோயம்புத்தூர் | கோவை வடக்கு, கோவை தெற்கு, கோவை மாநகர், நீலகிரி |
| “ பிப்ரவரி-11 | திருப்பூர் | ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, திருப்பூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, கரூர் |
| “ பிப்ரவரி-16 | ஒசூர் | கிருஷ்ணகிரி கிழக்கு, கிருஷ்ணகிரி மேற்கு, தருமபுரி கிழக்கு, தருமபுரி மேற்கு |
| “ பிப்ரவரி-17 | வேலூர் | வேலூர் , இராணிப்பேட்டை, திருப்பத்தூர் |
| “ பிப்ரவரி-18 | ஆரணி | திருவண்ணாமலை வடக்கு, திருவண்ணாமலை தெற்கு |
| “ பிப்ரவரி-20 | விழுப்புரம் | விழுப்புரம் வடக்கு, விழுப்புரம் தெற்கு, கடலூர் கிழக்கு, கடலூர் மேற்கு, அரியலூர், பெரம்பலூர் |
| “ பிப்ரவரி-21, 22, 23 | சென்னை | சென்னை வடக்கு, சென்னை வடகிழக்கு, சென்னை கிழக்கு, சென்னை மேற்கு, சென்னை தென்மேற்கு, சென்னை தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, காஞ்சிபுரம் தெற்கு, திருவள்ளூர் கிழக்கு, திருவள்ளூர் மேற்கு, திருவள்ளூர் மத்திய |

குறிப்பு: மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் கழக தேர்தல் அறிக்கை தயாரிப்புக்குழு வரும் சில நாட்களுக்கு முன்பாகவே, இக்குழு வருவதை உள்ளூர் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதோடு, கோரிக்கை மனு பெறுவதற்கான இடவசதி உள்ளிட்ட அனைத்து வசதிகளை ஏற்படுத்த வேண்டுமென அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 03.02.2024

**தலைமைக் கழகம்**
தி.மு.க.



புதுக்கோட்டை மௌண்ட் சியோன் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில், பள்ளிக்கல்வித்துறையின் சார்பில், 3வது மாநில அளவிலான 14 வயதிற்குட்பட்ட மாணவ, மாணவிகளுக்கான குடியரசு தின குழு விளையாட்டுப் போட்டிகளை, அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்து வீரர், வீராங்கனைகளுடன் டேபிள் டென்னிஸ் விளையாடினார்கள். உடன் புதுக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் மரு.வை.முத்துராஜா, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.மா.செல்வி, மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.எம்.மஞ்சுளா, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், மாநில முதன்மை உடற்கல்வி ஆய்வாளர் திருமதி.சி.நிர்மலாதேவி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.



அரியலூர் மாவட்டம், செந்துறை ஊராட்சி ஒன்றியம், செந்துறை பெருமாள் கோவில் அருகில் புதியதாக கட்டப்பட்ட அங்கன்வாடி மையத்தினை போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் திறந்து வைத்து, அங்கன்வாடி மையத்திற்கு வருகைபுரிந்த குழந்தைகளுக்கு இனிப்புகளை வழங்கி வரவேற்றார்.

### பேரறிஞர் அண்ணா 55 வது நினைவு தினம்!

# அறந்தாங்கியில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை!

## அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் அமைதி ஊர்வலம்!

புதுக்கோட்டை, பிப். - 6 -

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம் அறந்தாங்கியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு தினத்தை முன்னிட்டு சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளருமான எஸ்.ரகுபதி தலைமையில் அறந்தாங்கி புதிய பேருந்து நிலையத்திலிருந்து பேரணியாக வந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் ஏற்பாடுகளை நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன் செய்திருந்தார்.

நிகழ்ச்சியில் மாநில தீர்மான குழு உறுப்பினர் சி.ராமநாதன் , முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் உதய சண்முகம், நகர் மன்ற தலைவர் இரா. ஆனந்த, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே.கலைமணி, மாவட்ட கழக நிர்வாகிகள் ஜெ.அபுதாகிர், அடைக்கலம், ஸ்ரீதேவி, அண்ணாதுரை, ஒன்றிய செயலாளர்கள் பொன் கணேசன், வே.பொன்துரை, சக்தி ராமசாமி, எஸ்.எம்.சீனியார், பொன். ராமலிங்கம், வி.ஆர்.இளையராஜா, அழகு.சிதம்பரம் , பொதுக்குழு உறுப்பினர்கள் த.மணிராஜன், என். வீரையா,

கலைவாணி சுப்பிரமணியன் மற்றும் பழ. மாரியப்பன், தி.முத்து, கோ. சக்திவேல் , ஹரி. விமலாதி ராமசாமி, பாத்திமாபீவி ஆ.பழனிச்சாமி, கே.வி.ராமசாமி, அனுராதா ராஜேந்திரன், ஆனந்தராமன் , பி.ராவுத்தர்கனி, எஸ். அருளாந்து ஆர்.சரோஜா தேவி, கோ. துளசிராமன் , கா.கைலாசம், வி.ரமேஷ் , கீ.தமிழ்மறை செல்வம், செந்தில்குமார், பி.மாரியப்பன், கே.மதி, வி. கருணா, சுமங்கலி ஷாஜகான், ம.அன்பழகன் , சு. ரமேஷ், சோம.ஆறுமுகம் எஸ்.பாஸ்கரன், ஆர்.முருகநாராயணன், பஜாஜ் ஆறுமுகம், எல். பிரிட்டோ, ப.கருணாகரன், எஸ்.காளீஸ்வரன் வை.காம ராஜ், இரா. அடைக்கல ராஜா, அப்துல் நாசர், ப.வரதராஜன்,

பிச்சைமுகமது, என். பழனி ராஜன், சிவப்பிரகாசம், காந்தி நாதன், சி. செல்வம், வின்சென்ட் ராஜேந்திரன், பிர.சுப்பையா, கீரின் முகமது, அப்பாஸ் ரபீக், மீன் முருகேசன், பழனிக்குமார், கல்யாணம், சுபாஷ், சரவணன், ஜேசுராஜா, சுமதி, முத்துகுமார், என்.ஆர். டி.ரஜினி, ஜமால், அஜ்மீர் அலி, எம்.சி.சிவகுமார், பூங்குடி குமார், கருப்பையா, கண்ணன், அண்ணாதுரை, நாகராஜன், சுந்தர், ஜோதிடர் கணேசன், செந்தில்வேலன், சத்யா மணி , நாடர் சந்திரசேகரன் இந்திரா நகர் காளிமுத்து, ஒத்தக்கடை சேகர் செல்லப்ப கோட்டை வீரப்பன் மற்றும் கழக முன்னோடிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மேற்கு மாவட்டத்தில்

# பேரறிஞர் அண்ணா நினைவு நாள் - சிலைக்கு மரியாதை!

## மாவட்டச் செயலாளர் பி.பழனியப்பன் தலைமையில் மாலை அணிவிப்பு!

தருமபுரி, பிப். 6 -

தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை முன்னிட்டு அரூர் ரவுண்டானாவில் உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு தருமபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முனைவர். பி. பழனியப்பன் தலைமையில் மாலை அணிவித்து புகழ் வணக்கம் செலுத்தப்பட்டது.

அரூர் பேரூர் கழகச் செயலாளர் முல்லை ரவி ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத்தலைவர் கே. மனோகரன், மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் அ.சத்தியமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர்கள் வழக்கறிஞர்.ஆ.மணி, சி.கிருஷ்ணகுமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.சென்ன கிருஷ்ணன், பி.சி.ஆர்.மனோகரன்,

ஒன்றிய கழக செயலாளர்கள் ஆர்.வேடம்மாள், கோ.சந்திரமோகன், ஆர். சிவபிரகாசம், வே.சௌந்தரராசு, இடிடி.செங்கண்ணன், டி.நெப்போலியன், பேரூர் கழகச் செயலாளர் மோகன், பொதுக்குழு உறுப்பினர் எஸ். கலைவாணி, வாசுதேவன், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சி.தேசிங்கு ராஜன், கு.தமிழழகன், ஏ.சண்முகந்தி, மு.கா.முகமது அலி, தாமோதரன், பொதிகைவேந்தன், சி.தென்ன ரசு, ப.செந்தாமரைக் கண்ணன்,

அரூர் பேரூராட்சி துணைத் தலைவர் தனபால், மாவட்ட துணை அமைப்பாளர்கள் தீ. கோடீஸ்வரன், தங்க செழியன், நாசர், சென்ன கிருஷ்ணன், ராஜா, முஜிப், முருகேச ன்பெருமாள், ஜெய்லாப்தீன், திருவேங்கடம், குமரன், க. பொன்னு சாமி, செல்வதயாளன், தீ.வின்ன ரசன், மோகன், பூசைக் காரன், சிட்டிபாபு, பூங்கொடி, கிருஷ்ணமூர்த்தி, குப்பன், மாதேஸ்வரன், சரவணன், அருள்மொழி, மகாலட்சுமி, மோகன், அசோகன், அண்ணாதுரை, சின்னசாமி, நாகராஜ், சுதாகர், கணேசன், முனுசாமி, பாபு, சாய் ஆகாஷ், விமல், ஜார்ஜி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### குன்னம் தொகுதி

# செந்துறையில் பேரறிஞர் அண்ணா 55 வது நினைவு நாள்!

## திருவுருவச் சிலைக்கு அமைச்சர் சா.சி.சிவசங்கர் மாலை அணிவித்து மரியாதை!

அரியலூர், பிப், 6 -

அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசு போக்குவரத்துத்துறை அமைச்சர், மாவட்ட கழக செயலாளர் சா. சி.சிவசங்கர்தலைமையில் கழகத்தினர் செந்துறை பேருந்து நிலையத்தில் இருந்து அமைதி ஊர்வலமாக வந்து பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இதில் கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, ஒன்றியச் செயலாளர்கள் பூ.செல்வராஜ்,

வி.எழில் மாறன், கோ.அறிவழகன், ஆர். கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணிவஅமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்




கலைஞர் 100
1924 - 2024
நாள்: 06.02.2024
செவ்வாய்க்கிழமை
நேரம்: காலை 11 மணி
இடம்:
ராஜா அண்ணாமலை மன்றம், ஜார்ஜ் டவுன், சென்னை 1
சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறையின் சார்பில் வழங்கப்படும்
❖ நான்கு வகையான திருமண உதவித் திட்டங்களின் கீழ் 551 நபர்களுக்கு 8 கிராம் தங்கம் மற்றும் நிதியுதவி.
❖ முதலமைச்சரின் இரண்டு பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 142 பேருக்கு புதிதாக வைப்புத் தொகை மற்றும் முதிர்வுத் தொகை.
❖ திருநங்கைகளுக்கு தொழில் தொடங்க 20 பேருக்கு மானியம்.
❖ சத்தியவாணிமுத்து அம்மையார் நினைவு இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 18 பேருக்கு தையல் இயந்திரம்
என மொத்தம் 731 நபர்களுக்கு ரூ.5 கோடியே 63 இலட்சத்து, 66 ஆயிரத்து, 301 ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கிட வருகை தரும்
இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர்
மாண்புமிகு
உதயநிதி ஸ்டாலின்
அவர்களே வருக! வருக!
அன்புடன் வரவேற்று மகிழும்: பி.கீதாஜீவன் எம்.காம்.,பி.எட்.,
சமூக நலன் – மகளிர் உரிமை துறை அமைச்சர் – தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர்



நாமக்கல் மேற்கு மாவட்டம் கபிலர்மலை ஒன்றியம் வெங்கரை பேரூராட்சி அ.தி.மு.க. பேரூர் மாணவரணி அமைப்பாளர் தமிழ்ச்செல்வன் தலைமையில் 100க்கும் மேற்பட்டோர் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சியைச் சேர்ந்தவர்கள் அக்கட்சியில் இருந்து விலகி, நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம். மதுரா செந்தில், கபிலர்மலை ஒன்றிய தி.மு.க. செயலாளர் கே.கே.சண்முகம் ஆகியோர் முன்னிலையில் வெங்கரை திராவிட முன்னேற்றக் கழகத்தில் இணைந்தனர். இந்நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.



சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் உதகையில் உள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக ஹோட்டல் தமிழ்நாடு, உணவகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகளை ஆய்வு செய்தார். உடன் துறை அலுவலர்கள் உள்ளனர்.

## 2022 - 23 ஆம் ஆண்டில் வெளி நாடுகளிலிருந்து

# இறக்குமதி செய்யப்பட்ட உரம் எவ்வளவு?

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி !



புதுடெல்லி, பிப். 6 -

கடந்த 2022-23 ஆம் ஆண்டில் இந்தியா, சீனா உட்பட வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்த உரம் அளவு/மதிப்பு குறித்தும் மாநிலம் வாரியாக வழங்கப்பட்ட உர மானியம் குறித்தும் நாடாளுமன்ற மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து மக்களவையில் அவர் மேலும் எழுப்பிய கேள்வி வருமாறு :-

2022-23 ஆம் ஆண்டில் இந்தியாவின் உர இறக்குமதியானது 18 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் (ரூ.1,49,399 கோடியே19 இலட்சம்), சீனாவில் இருந்து மட்டும் சுமார் 3 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் (ரூ24,899 கோடியே 86 இலட்சத்து 50 ஆயிரம்) உள்ளது என்பது உண்மையா? அப்படியானால், அதன் விவரங்கள் யாவை? 2030 ஆம் ஆண்டிற்குள் உரங்களின் தேவை மற்றும் விநியோகத்தில் தன்னிறைவு அடைய அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட / முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

ஒவ்வொரு ஆண்டும் உர மானியமாக 80,000 கோடி வழங்கப்படுகிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் மற்றும் உரங்களின் தற்போதைய விலையுடன், நாடு முழுவதும் உள்ள விவசாயிகளுக்கு மாநிலம்/யூனியன் பிரதேச வாரியாக வழங்கப்படும் மானியம் என்ன?

இதற்கு ஒன்றிய அரசின் இரசாயனங்கள் மற்றும் உரங்களுக்கான ராஜாங்க அமைச்சர் பக்வந்த் குபா எழுத்து பூர்வமாக அளித்த பதில் வருமாறு :-

யூரியா உற்பத்தி மற்றும் தேவைக்கு இடையே உள்ள இடைவெளியைக் குறைக்க, உரங்கள் துறை மூலம் இந்திய அரசு யூரியாவை விவசாயப் பயன்பாட்டுக்காக அரசாங்கக் கணக்கில் இறக்குமதி செய்கிறது. 2022-23 ஆம் ஆண்டில் யூரியாவின் இறக்குமதி மற்றும் அதன் மதிப்பு பில்லியன் அமெரிக்க டாலரில் பின்வருமாறு :-

2022-23இல் இந்திய அரசு வெளிநாடுகளில் 4.751 பில்லியன் அமெரிக்க டாலர்கள் அதாவது 39,433 கோடியே 8 இலட்சத்து 62 ஆயிரத்து ஐம்பது ரூபாய் மதிப்புள்ள 75.80 லட்சம் மெட்ரிக் டன் யூரியா இறக்குமதி செய்துள்ளது.

2022-23ல் சீனாவில் இருந்து 0.831 பில்லியன் அமெரிக்க டாலர்கள் மதிப்புள்ள அதாவது 6ஆயிரத்து 897 கோடியே 26 இலட்சத்து 26 ஆயிரத்து ஐம்பது ரூபாய் மதிப்புள்ள 12.80 லட்சம் மெட்ரிக் டன் யூரியா இறக்குமதி செய்துள்ளது.

இது தவிர பாஸ்பேடிக்&பொட்டாசியம் (P&K) உரங்களைப் பொறுத்த வரையில், இந்த வகை உரங்கள் ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியத் திட்டத்தின் (NBS) கீழ் திறந்த பொது உரிமத்தின் (OGL) கீழ் உள்ளன. அவை வணிக ரீதியாக சாத்தியமான விதிமுறைகளின் அடிப்படையில் பல்வேறு தனியார் நிறுவனங்களால் இறக்குமதி செய்யப்படுகின்றன. இறக்குமதி செய்யப்பட்ட பாஸ்பேடிக்&பொட்டாசியம் உரங்களின் மதிப்பு எவ்வளவு என்பது அரசாங்க கணக்கில் பராமரிக்கப்படவில்லை. இருப்பினும், 2022-23ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட பாஸ்பேடிக்&பொட்டாசியம் உரங்களின் அளவு கீழே உள்ள அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது.

2022-23ல் வெளிநாடுகளில் இருந்து 112.01 இலட்சம் மெட்ரிக் டன் பாஸ்பேடிக் & பொட்டாசியம் இறக்குமதி செய்யப்பட்டது. இதில் சீனாவில் இருந்து 13 இலட்சம் மெட்ரிக் டன் பாஸ்பேடிக்&பொட்டாசியம் இறக்குமதி செய்யப்பட்டது.

### யூரியா உர உற்பத்தி!

யூரியா உர உற்பத்தி துறையில் புதிய முதலீட்டை எளிதாக்குவதற்கும் யூரியா உர உற்பத்தி துறையில் இந்தியாவை தன்னிறைவு அடையச் செய்வதற்கும் ஒன்றிய அரசு புதிய முதலீட்டுக் கொள்கை 2012ஐ ஜனவரி 2, 2013 அன்று அறிவித்தது மற்றும் அதன் திருத்தம், அக்டோபர் 7, 2014 அன்று அறிவித்தது.

NIP 2012 இன் கீழ் மொத்தம் 6 புதிய யூரியா அலகுகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை Matixஉரங்கள் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (Matix) இன் பனகர் யூரியா அலகு; சம்பல் உரங்கள் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (CFCL) இன் கடேபன்-III யூரியா அலகு; ராமகுண்டம் உரங்கள் மற்றும் கெமிக்கல்ஸ் லிமிடெட் (RFCL)ன் ராமகுண்டம் யூரியா யூனிட்; மற்றும் ஹிந்துஸ்தான் உர்வரக்&ரசாயன் லிமிடெட்டின் (HURL) கோரக்பூர், சிந்திரி மற்றும் பரௌனி ஆகிய 3 யூரியா அலகுகள் ஆகும். இந்த யூனிட்கள் ஒவ்வொன்றும் ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் யூரியா உற்பத்தித் திறனைக் கொண்டுள்ளன.

எனவே, இந்த யூனிட்கள் இணைந்து ஆண்டுக்கு 76.2 லட்சம் மெட்ரிக் டன் அளவில் நாட்டின் தற்போதைய உள்நாட்டு யூரியா உற்பத்தி திறனில் சேர்த்துள்ளன, மேலும், நிலக்கரி வாயுப் பாதையில் ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் என்ற புதிய கிரீன்ஃபீல்ட் யூரியா ஆலையை அமைப்பதன் மூலம் எஃப்சிஐஎல்-ன் டால்ச்சர் யூனிட்டின் மறுமலர்ச்சிக்கான பிரத்யேக கொள்கை 28 ஏப்ரல் 2021 அன்று அறிவிக்கப்பட்டது.

உள்நாட்டு யூரியா உற்பத்தியை அதிகப்படுத்தும் நோக்கங்களில் ஒன்றான புதிய யூரியா கொள்கை (NUP) 2015ஐ 2015 மே 25 அன்று அரசாங்கம் அறிவித்துள்ளது. NUP-2015 யூரியாவின் உற்பத்தியை 2014-15 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் கூடுதல் உற்பத்திக்கு வழிவகுத்தது.

### இந்துஸ்தான் உரக் கழகம் பரிந்துரை!

நாட்டில் உள்நாட்டு யூரியா உற்பத்தியை அதிகரிப்பதற்காக, இந்திய உரக் கழகம் (FCIL) மற்றும் பராவ்னி (பீகார்), ராமகுண்டம் (தெலுங்கானா), கோரக்பூர் (உத்தரப் பிரதேசம்), சிந்திரி (ஜார்கண்ட்) மற்றும் தல்ச்சர் (ஒடிசா) ஆகியவற்றின் யூனிட்களை புதுப்பிக்க இந்திய அரசு கட்டாயப்படுத்தியது.

இந்துஸ்தான் உரக் கழகம் லிமிடெட் (HFCL) இன் யூனிட் (HFCL) பரிந்துரைக்கப்பட்ட பொதுத்துறை நிறுவனங்களின் கூட்டு முயற்சி நிறுவனம் (JVC) மூலம் ஆண்டுக்கு 12.7 லட்சம் மெட்ரிக் டன் திறன் கொண்ட புதிய அம்மோனியா-யூரியா ஆலைகளை அமைப்பதற்காகவும் ராமகுண்டம் மற்றும் கோரக்பூர் யூனிட்கள் முறையே 22.03.2021 மற்றும் 07.12.2021 ஆகிய தேதிகளில் இயக்கப்பட்டன. மேலும், பாரௌனி மற்றும் சிந்த்ரி யூனிட்கள் முறையே 18.10.2022 மற்றும் 05.11.2022 அன்று யூரியா உற்பத்தியைத் தொடங்கின. இந்த நான்கு ஆலைகளும் 50.8 லட்சம் மெட்ரிக் டன் உள்நாட்டு யூரியா உற்பத்தி திறனை நாட்டில் சேர்த்துள்ளன.

ஊட்டச் சத்து அடிப்படையிலான உர மானியக் கொள்கையை அரசாங்கம் நடைமுறைப்படுத்தியுள்ளது. 1.4.2010 பாஸ்பேடிக் மற்றும் பொட்டாசிக் (P&K) உரங்களுக்கு. பாலிசியின் கீழ், வருடாந்திர/அரை ஆண்டு அடிப்படையில் நிர்ணயிக்கப்பட்ட ஒரு நிலையான அளவு மானியம், அறிவிக்கப்பட்ட பி&கே உரங்களுக்கு அவற்றின் ஊட்டச்சத்து உள்ளடக்கத்தைப் பொறுத்து வழங்கப்படுகிறது. இந்தக் கொள்கையின் கீழ், நியாயமான அளவில் சந்தை இயக்கவியலின் படி உர நிறுவனங்களால் MRP நிர்ணயிக்கப்படுகிறது.

மேலும், P&K உரங்கள் திறந்த பொது உரிமத்தின் (OGL) கீழ் உள்ளன.

இந்த உரங்களை இறக்குமதி செய்ய/உற்பத்தி செய்ய தடையற்ற அனுமதி உண்டு. பெறப்பட்ட கோரிக்கைகளை ஆய்வு செய்ததன் அடிப்படையில், உர நிறுவனங்களுக்கு அவற்றின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், புதிய பி&கே நிறுவனங்கள் மற்றும் அவற்றின் உரப் பொருட்களை என்.பி.எஸ்., திட்டத்தின் கீழ் அறிமுகப்படுத்தவும் அனுமதி வழங்கப்படுகிறது. உற்பத்தியை அதிகரிக்கவும், உர உற்பத்தியில் நாட்டை தன்னிறைவு அடையச் செய்யவும். எடுக்கப்பட்ட மற்ற நடவடிக்கைகள்:

(i) 100% உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட உரமான மொலாசஸிலிருந்து (PDM) பெறப்பட்ட பொட்டாஷை ஊக்குவிக்க ஊட்டச்சத்து அடிப்படையிலான மானியம் (NBS) ஆட்சியின் கீழ் அறிவிக்கப்பட்டுள்ளது. 13.10.2021.

(ii) மண்ணுக்கு பாஸ்பேட்டிக் அல்லது 'பி' ஊட்டத்தை வழங்குவதற்காக எஸ்எஸ்பி பயன்பாட்டை ஊக்குவிப்பதற்காக காரீஃப் மற்றும் ரபி 2023-24க்கு உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட உரமான எஸ்எஸ்பியின் சரக்கு மானியம் பொருந்தும்.

(iii) (c): 2019-20 முதல் தற்போது வரை NBS மானியத்திற்கான ஆண்டு வாரியான செலவு பின்வருமாறு:

2019-20ல் ரூ. 83,468 கோடிகள், 2020-21 ரூ. 1,31,229 கோடிகள், 2021-22 ரூ. 157,640 கோடிகள், 2022-23 ரூ. 254,799 கோடிகள் ஆகும்.

சட்டப்படி அறிவிக்கப்பட்ட அதிகபட்ச சில்லறை விலையில் (MRP) விவசாயிகளுக்கு யூரியா வழங்கப்படுகிறது. 45 கிலோ யூரியாவின் MRP ஒரு மூட்டைக்கு ரூ.242 (வேம்பு பூச்சுக்கான கட்டணம் மற்றும் பொருந்தக்கூடிய வரிகள் தவிர). யூரியா உற்பத்தியாளர்/இறக்குமதியாளருக்கு இந்திய அரசாங்கத்தால் யூரியா உற்பத்தியாளர்/இறக்குமதியாளருக்கு மானியமாக யூரியா யூனிட்கள் மூலம் யூரியாவின் பண்ணை வாயிலில் விநியோகிக்கப்படும் விலை மற்றும் நிகர சந்தை உணர்தல் ஆகியவற்றுக்கு இடையே உள்ள வித்தியாசம். அதன்படி, அனைத்து விவசாயிகளுக்கும் மானிய விலையில் யூரியா வழங்கப்பட்டு வருகிறது.

2023-24நிதியாண்டிற்கான P&K உரங்களின் தற்போதைய சராசரி MRP (30.01.2024 அன்று) (NIC ஆலோசகரிடமிருந்து பெறப்பட்டது) இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தனது பதிலில் தெரிவித்துள்ளார்.

## சோ.பா.மலர்வண்ணன் ஏற்பாட்டில்! ஏர்வைக்காட்டில்

# அ.தி.மு.க. - மாற்றுக் கட்சிகளை சேர்ந்த 80 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் முன்னிலையில்! கோ.சிவக்குமார், கே.எஸ்.தனபால் பங்கேற்பு!

நாகை, பிப். 6 -

நாகை மாவட்டம் கீழையூர் மேற்கு ஒன்றியம் மேல வாழக்கரை ஊராட்சி ஏர்வைக்காடு கிராமத்தில் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளை சேர்ந்த 40 குடும்பங்களை சேர்ந்தவர்கள் 80 பேர் அக் கட்சிகளில் இருந்து விலகி கழகத்தில் இணையும் நிகழ்ச்சி ஏர்வைக்காட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் கீழையூர் மேற்கு ஒன்றியச் செயலாளர் சோ.பா.மலர்வண்ணன், மேல ஊராட்சி மன்ற தலைவர் கே.எஸ். தனபால் ஆகியோர் வரவேற்றனர். கிளை செயலாளர்கள் முத்துகிருஷ்ணன், ராஜேந்திரன், மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சண்முகேஷ்வரன், பொருளாளர் ஜெயராமன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் அ.தி.மு.க. உள்ளிட்ட பல்வேறு கட்சிகளில் இருந்து 40 குடும்பங்களை சேர்ந்தவர்கள் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கழகத்தில் இணைந்தவர்களுக்கு இரு வண்ண கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு கழகத்தில் இணைத்து கொள்ளப்பட்டது.

நிகழ்ச்சியில் பொதுக் குழு உறுப்பினர் கோ.சிவக்குமார், வாழக்கரை ஊராட்சி மன்ற தலைவர் எஸ்.ஆர்.கலைச்செழியன், ஒன்றியக் குழு உறுப்பினர் சுதாஅருணகிரி, மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை ஒருங்கிணைப்பாளர் எஸ்.செல்வா, மாவட்ட வர்த்தகர் அணி துணை அமைப்பாளர் வி. எம்.கே.பாலாஜி, மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜோதிபாசு, மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் குவளைகணேசன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் செந்தில்,

ஒன்றிய மாணவர் அணி துணை அமைப்பாளர் மார்டீன்லூதர், ஊராட்சி மன்ற துணைத்தலைவர் சித்திரா கிளை நிர்வாகிகள் தங்கமணி , ராஜேந்திரன், சத்தியபாமா, ஜெயபால், சம்பந்தமூர்த்தி, ரவிச்சந்திரன், முத்துகிருஷ்ணன், முனுசாமி, கோவிந்தசாமி, விவேகானந்தன், சங்கர், பாலாஜி, செந்தில், எட்டுக்குடி ஸ்ரீதர், அன்பழகன், மணிகண்ணன், காளிதாஸ், சவுரிராஜன், பாஸ்கர் மற்றும் கிளை கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## சீர்காழி தமிழிசை மூவர் மணிமண்டபம் -

# மாயூரம் முன்சீப் வேதநாயகம் அரங்கம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு !

மயிலாடுதுறை, பிப். 6 -

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தமிழிசை மூவர் மணிமண்டபம் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் கட்டப்பட்டு வரும் மாயூரம் முன்சீப் வேதநாயகம் அரங்கம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருவதையும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் .மு.பெ.சாமிநாதன் ஆய்வு செய்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர்பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, முத்து மகேந்திரன்,மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரபாண்டியன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் துணை செயலாளர் எஸ். செல்வமணி கண்ணகி மாவட்ட கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர் ஒன்றிய கழகச் செயலாளர்கள் செல்லசேது. ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி.ஜே.பிரபாகர், பஞ்சு.குமார், அமிர்த.விஜயகுமார், பி. எம்.அன்பழகன், எம்.அப்துல் மாலிக், என்,இளையபெருமாள், ஞான.இமய நாதன், பி.முருகுமணி, மூவலூர் எம். மூர்த்தி, கு.வைத்தியநாதன், மங்கை எம்.சங்கர் ஏ.ஆர். ராஜா, சீர்காழி நகரச் செயலாளர் மா. சுப்பராயன் மயிலாடுதுறை நகர செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர் அண்ணாதுரை, முத்துராஜா, அன்புச்செழியன், சம்சுதீன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், காந்தி, கென்னடி, ஹர்ஷத், நத்தம் வின்சென்ட், எஸ். வெற்றிவேல் சங்கரநாராயணன், சுபாநெடுஞ்செழியன் மாவட்ட ஊராட்சித் தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றியக்குழு தலைவர்கள் காமாட்சி மூர்த்தி , ஜெயப்பிரகாஷ், மகேந்திரன், சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர்;

மு.பெ.சாமிநாதன்செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில்

மாயூரம் கவிஞர் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு அரங்கம் மற்றும் சிலையும் மயிலாடுதுறையில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த வகையில், செய்தித்துறையின் மூலமாக அந்த பணியை பொதுப்பணித்துறையின் வாயிலாக இந்த அரங்கத்தின் கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இதற்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் அவர்கள் நிதி வழங்கியுள்ளார்கள். இது போன்று, தமிழ்நாடு முழுவதும் சுதந்திர போராட்ட வீரர்கள், தமிழ்மொழி தியாகிகள், மக்களுக்காக உழைத்திட்டவர்கள் போன்ற தலைவர்களுக்கு அரங்கம், சிலை அமைக்கும் பணியை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், சீர்காழியில் தமிழிசை மூவர் மணிமண்டபம் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளோம். மேலும், இப்பணிகள் விரைவாக முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.


அதுபோல், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் அமைந்துள்ள தமிழிசை மூவர் மணிமண்டபமும் ஆய்வு செய்து செய்தித் துறை மூலம் பொதுப் பணித்துறை வாயிலாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஏறத்தாழ ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் 95 சதவீத பணிகள் நடைபெற்றுள்ளது. விரைவில் இது மக்களுடைய பயன்பாட்டிற்கு குறிப்பாக, போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் இவ்விடம் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று உள்ளது. என தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.



திருச்சியில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 ஆவது நினைவு நாளை முன்னிட்டு கலைஞர் அறிவாலயத்தில் இருந்து சத்திரம் பேருந்து நிலையம் சிந்தாமணி அருகே உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருஉருவ சிலைக்கு மத்திய மாவட்ட செயலாளர் வைரமணி, மாநகர செயலாளரும் மாநகராட்சி மேயருமான அன்பழகன் ஆகியோர் தலைமையில் திமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். இந்நிகழ்வில் ஸ்ரீரங்கம் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் பழனியாண்டி, சேர்மன் துரைராஜ், துரை அழகிரி , புத்தூர் தர்மராஜ்மற்றும் கழக நிர்வாகிகள் கருணாநிதி கண்ணன், மோகன்தாஸ் இளங்கோவன் நாகராஜ் , பாலமுருகன் சதீஷ் கருணாமூர்த்தி சாமி தாஹிர் முத்துக்குமார், கார்த்தி சுரேஷ் எம் ஆர் எஸ் குமார்உள்ளிட்ட பகுதி செயலாளர்கள் மாமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டு அண்ணாவின் திருவுருவ சிலைக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.



நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகம் சார்பில் பேரறிஞர் அண்ணாவின் 55 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற அமைதிப் பேரணி நேதாஜி சிலையிலிருந்து துவங்கி மணிக்கூண்டு வழியாக மோகனூர் சாலையை வந்தடைந்தது. அங்கு உள்ள பேரறிஞர் அண்ணா சிலைக்கு கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதைச் செலுத்தினர். இப்பேரணியில் சட்டமன்ற உறுப்பினர்கள் ராமலிங்கம், பொன்னுசாமி, மாநில, மாவட்ட, ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள், கழக நிர்வாகிகள் மணிமாறன், நகர் மன்ற உறுப்பினர்கள்உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




## புதுக்கோட்டை மாவட்டம்

# மலையகோவிலில் தைப்பூசத்தை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி!

## அமைச்சர் எஸ்.ரகுபதி துவக்கி வைத்தார்!

புதுக்கோட்டை, பிப். 6-

புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் அருகே மலையகோவிலில் ஒவ்வொரு வருடமும் தைப்பூசத்தை முன்னிட்டு ஜல்லிக்கட்டு போட்டி நடைபெறும். இந்த வருட ஜல்லிக்கட்டு போட்டி விமர்சையாக நடைபெற்றது.

போட்டியை தமிழக சட்டத்துறை அமைச்சர் எஸ். ரகுபதி தொடங்கி வைத்தார்.

ஜல்லிக்கட்டு தொடங்குவதற்கு முன்னதாக இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் ஜல்லிக்கட்டு உறுதி மொழியை வாசிக்க வீரர்கள் மற்றும் பார்வையாளர்கள் ஏற்றுக்கொண்டனர்.

இந்த ஜல்லிக்கட்டில் புதுக்கோட்டை மாவட்டம் மட்டுமன்றி மதுரை, சிவகங்கை, தஞ்சாவூர், திருவாரூர், திருச்சி, திண்டுக்கல், தேனி ,ராமநாதபுரம் உள்ளிட்ட பல்வேறு மாவட்டங்களிலிருந்து வந்திருந்த 750காளைகளும் 300 மாடு பிடி வீரர்களும் பங்கேற்றுள்ளனர். இந்த ஜல்லிகட்டு போட்டி 6சுற்றுகளாக நடைபெற்றது.வாடி வாசலில் இருந்து ஒன்றன் பின் ஒன்றாக அவிழ்க்கப்பட்ட காளைகள் துள்ளி குதித்து சீறிப் பாய்ந்து வருவதை மாடுபிடி வீரர்கள் மல்லுக்கட்டி தழுவினர்.

இந்த ஜல்லிக்கட்டில் சிறந்த முறையில் காளைகளை தழுவிய மாடுபிடி வீரர்களுக்கும் நீண்ட நேரம் வீரர்களை திணறடித்து களமாடும் காளைகளுக்கும் சைக்கிள் கட்டில், பீரோ, டைனிங் டேபிள், சில்வர் பாத்திரங்கள், பேன், மிக்ஸி குக்கர், கிரைண்டர், வெள்ளி காசு, ரொக்கப் பணம் உள்ளிட்டவைகள் பரிசாக வழங்கப்பட்டது.

காளைகள் மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட பிறகே வாடிவாசலுக்குள் அனுமதிக்கப்பட்டது. மேலும் 100க்கும் மேற்பட்ட காவல்துறையினர் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். அதேபோல் சுகாதாரத்துறை, கால் ந'டைத்துறை வருவாய்த் துறை, தீயணைப்பு துறை உள்ளிட்ட பல்வேறு துறைகள் கண்காணிப்பில் இந்த ஜல்லிக்கட்டு நடைபெற்றது.

## பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள்!

# தருமபுரி கிழக்கு மாவட்டத்தில் அமைதி ஊர்வலம்!

## தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் அண்ணா சிலைக்கு மரியாதை!

தருமபுரி, பிப். 6 -

தருமபுரி கிழக்கு மாவட்ட நகர தி.மு.கழகம் சார்பில் அறிவுலக மேதை தென்னாட்டு காந்தி பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாள் அமைதி ஊர்வலம் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளையொட்டி தருமபுரி ராஜகோபால் கவுண்டர் பூங்கா அருகில் இருந்து அமைதி ஊர்வலமாக புறப்பட்டு ஆறுமுக ஆச்சாரி தெரு வழியாகச் சென்று நான்கு ரோட்டில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் எம்.எல்.ஏ. தடங்கம் பெ.சுப்ரமணி தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் நகரச் செயலாளர் நாட்டான்மாது,மாவட்ட அவைத்தலைவர் சி.செல்வராஜ், மாவட்ட நிர்வாகிகள் வே.தங்கமணி, ரேணுகா தேவி, உமாசங்கர், ஆறுமுகம்,மாநில நிர்வாகிகள் இரா.தாமரைச்செல்வன், செந்தில்குமார் மற்றும் பொதுக்குழு உறுப்பினர் சோலை மணி, நகர மன்ற தலைவர் திருமதி. லட்சுமி மாது, மற்றும் ஒன்றிய செயலாளர்கள் கே எஸ் ஆர் சேட்டு, வைகுந்தம்,கருணாநிதி, சண்முகம், சபரிநாதன் மற்றும் மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர் மே. அன்பழகன்,

நகர நிர்வாகிகள் முல்லைவேந்தன், அழகுவேல், அன்பழகன், கோமளவள்ளி ரவி கனகராஜ், சுருளிராஜன் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள் புவனேஸ்வரன், மாதேஸ்வரன், ஜெகன், கிளை கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் டி.ஏ.குமார், காசிநாதன், பொன்.மகேஸ்வரன், ரஹீம், பெரியண்ணன், விஜயன், ஹரி விக்னேஷ், பத்மா மற்றும் துணை அமைப்பாளர்கள்,

வானவில். சண்முகம், உதயசூரியன், டி.ஏ.ரவி, வெல்டிங் ராஜா, ஆர்.கே. முகமது அசோக்குமார், செல்வராஜ் ரவி, சக்திவேல் சூர்யா தமிழ்ச்செல்வன், குமுதா மற்றும் கழகத்தினர், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு மாவட்ட விவசாய தொழிலாளர் அணி சார்பில் அணி அமைப்பாளர் சி.அரங்கநாயகம் ஏற்பாட்டில் புதுக்கோட்டை வடக்கு ஒன்றியம் ஆதனக்கோட்டையில் பொதுமக்களுக்கு 1000 தென்னக் கன்றுகள் வழங்கும் நிகழ்ச்சி மாவட்டக் கழகச் செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லப்பாண்டியன் தலைமையில் வழங்கப்பட்டது. நிகழ்வில் முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர் கவிச்சுடர் கவிதைப்பித்தன், த.சந்திரசேகர், கே.ஆர்.என்.போஸ், எஸ்.எஸ்.கருப்பையா, கீரை.தமிழ்ராஜா, ஜெயலட்சுமி தமிழ்ச்செல்வன், மு.க.ராமகிருஷ்ணன், ஆர்.ஆர்.சாமிநாதன், வி.முத்துகிருஷ்ணன், எம்.எம்.பாலு, வி.என்.எம்.பாலமுருகன், வி.ஜி.ஆர்.மணிவண்ணன், எஸ்.வி.ஆர்.ஸ்டாலின், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், ஆ.மரியஎட்வின், ஜெயராமன், எஸ்.டி.கண்ணன், சண்முகம் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.


தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்றச் சங்கத் தலைவரும்,தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய உறுப்பினருமான ரெ.தங்கம், உடல்நிலை குன்றிய புதுக்கோட்டை தெற்கு மாவட்ட அமைப்பு சாரா ஓட்டுனர் அணி தலைவரும், தமிழ்நாடு அரசு மாற்றுத்திறனாளிகள் நலவாரிய ஆலோசனைக்குழு உறுப்பினருமான ஆலங்குடி ஏ.கே.செல்வத்தை நேரில் சென்று நலம் விசாரித்தார். தமிழ்நாடு மாற்றுத்திறனாளிகள் முன்னேற்ற சங்க மாநில பொருளாளர் டாக்டர் எஸ்.நசீம், புதுக்கோட்டை மாவட்ட சங்க நிர்வாகி ஆ.சிவக்குமார், மாநில சங்க செயற்குழு உறுப்பினர் ஆர்.சீனிவாசன் ஆகியோர் உடன் உள்ளனர்.



தஞ்சை மத்திய மாவட்டம், மாநகர தி.மு.க சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளை முன்னிட்டு தஞ்சையில் மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ. தலைமையில் அமைதி ஊர்வலம் நடைபெற்று பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். இந்நிகழ்வில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் எம்.பி., தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ., து.செல்வம், மாநரக் கழகச் செயலாளர் சண்.இராமநாதன் மற்றும் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்ள்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழக பிரதிநிதிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தினர்.

# பெரம்பலூர் மாவட்டத்தில் ரூ.25.84 கோடியில் திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் தொடங்கி வைத்தார்!

பெரம்பலூர், பிப்.6-

போக்குவரத்துத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர், பெரம்பலூர் மாவட்டம் வேப்பூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் ரூ.25.84 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

இதுகுறித்து போக்குவரத்துத்துறை அமைச்சர் சா. சிவசங்கர் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

பெரம்பலூர் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் முறையாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. அதனடிப்படையில் இன்று வேப்பூர் ஊராட்சி ஒன்றி யத்திற்குட்பட்ட குன்னம் பேருந்து நிலையம் அருகில் 15 ஆவது நிதிக் குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.13.50 லட்சம் மதிப்பீட்டில் சுகாதார வளாகம் கட்டும் பணியினையும், பேரளி ஊராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.18.91 லட்சம் மதிப்பீட்டில் மருவத்தூர் காலனி முருகேசன் வீட்டு தெரு தார்ச் சாலை அமைக்கும் பணியினையும், ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் மருவத்தூர் புதிய காலனி தெருவில் தார்ச் சாலை அமைக்கும் பணியினையும், நபார்டு திட்டத்தின் கீழ் ரூ.1.28 கோடி மதிப்பீட்டில் மருவத்தூர் ஆதனூர் தார்ச் சாலை அமைக்கும் பணியினையும், சித்தளி ஊராட்சியில் பொதுப்பணித்துறை சார்பில் ரூ.20.50 லட்சம் மதிப்பீட்டில் பீல்வாடி பள்ளி கட்டிடம் கட்டும் பணியினையும், எழுமூர் ஊராட்சி எழுமூர் கிராமத்தில் ஜல்ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.16.75 லட்சம் மதிப்பீட்டில் 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினையும், காருக்குடி கிராமத்தில் ரூ.27.25 லட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினையும்,

ஆண்டிக்குரும்பலூர் ஊராட்சி வைத்தியநாதபுரம் கிராமத்தில் ரூ.27.25 லட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல் நிலை நீர்த்தேக்க தொட்டி அமைக்கும் பணியினையும், பரவாய் ஊராட்சியில் பிரதான் மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா திட்டத்தின் கீழ் ரூ.20 லட்சம் மதிப்பீட்டில் 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்கும் பணியினையும், ஒலைப்பாடி ஊராட்சிக்குட்பட்ட வேப்பூர் பகுதியில் பொதுப்பணித்துறை சார்பில் ரூ.5.44 கோடி மதிப்பீட்டில் வேப்பூர் அரசு மகளிர் கல்லூரியில் பிற்படுத்தப்பட்டோர் மகளிர் விடுதி கட்டும் பணியினையும், புதுவேட்டக்குடி ஊராட்சியில் நபார்டு மற்றும் நெடுஞ்சாலைத் துறையின் சார்பில் ரூ.3.58 கோடி மதிப்பீட்டில் புதுவேட்டக்குடி லெப்பைக் குடிக்காடு சாலை வேப்பூர் ஆணைவாரியின் ஓடையில் உயர்மட்ட பாலம் கட்டும் பணியினையும், புது வேட்டக்குடி ஊராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.31.93 லட்சம் மதிப்பீட்டில் புதுவேட்டக்குடி ஆதிதிராவிடர் கிழக்கு தெருவில் சாலை பலப்படுத்தும் பணியையும், கீழப்பெரம்பலூர் ஊராட்சியில் நெடுஞ்சாலை துறையின் சார்பில் கீழப் பெரம்பலூர் வேள்விமங்கலம் சின்னாற்றின் குறுக்கே ரூ.9.47 கோடி மதிப்பீட்டில் உயர் மட்ட பாலம் கட்டும் பணியினையும், பேரளி ஊராட்சியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ரூ.18.91 லட்சம் மதிப்பீட்டில் மருவத்தூர் காலனி முருகேசன் வீட்டு தெரு தார் சாலை அமைக்கும் பணியினையும், ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் மருவத்தூர் புதிய காலனி தெருவில் தார் சாலை அமைக்கும் பணியினையும் என பல்வேறு பகுதிகளில் மொத்தம் ரூ.24.25 கோடி மதிப்பீட்டில் 33 பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த பணிகள் அனைத்தும் மிக விரைவில் முடித்து பொது மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

### முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்!

மேலும் பேரளி ஊராட்சியில் சட்டமன்ற உறுப்பினரின் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.21 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட மருவத்தூர் ஒன்றிய தொடக்கப்பள்ளி கட்டிடம், சித்தளி ஊராட்சி யில் பொதுப்பணிதுறையின் சார்பில் ரூ.20.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட பீல்வாடி பள்ளி கட்டிடம், எழுமூர் ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.8.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட காரைக்குடி அங்கன்வாடி மைய கட்டிடம், காடூர் ஊராட்சியில் ரூ.31.92 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நெல் கொள்முதல் நிலைய தானியக்கிடங்கு, நல்லறிக்கை பகுதியில் பொதுப்பணித்துறையின் சார்பில் ரூ.16.40 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட கிராம நிர்வாக அலுவலக கட்டிடம் என பல்வேறு பணிகள் ரூ.1.59 கோடி மதிப்பீட்டில் முடிக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்துள்ளோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்கள் நலன் கருதியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களை பொதுமக்கள் முறையாக, முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.


இந்நிகழ்வுகளில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, வேப்பூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பிரபா செல்லப்பிள்ளை, மாவட்ட ஊராட்சிக்குழு துணைத் தலைவர் முத்தமிழ்ச்செல்வி மதியழகன், மாவட்ட ஊராட்சிக்குழு உறுப்பினர் தழுதாழை பாஸ்கர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.


தேசப்பிதா காந்தியடிகளின் நினைவு நாளை போற்றும் விதமாக தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அறிவுறுத்தல் படி சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் உள்ள தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் மகாத்மா காந்தியின் திருவுருவப்படத்திற்கு கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர். சிவலிங்கம் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர்கள் சுரேஷ்குமார், சின்னதுரை, மாவட்ட அவைத்தலைவர் முரா.கருணாநிதி, மாவட்ட பொருளாளர் ஸ்ரீராம், ஏ.ஏ.ஆறுமுகம், சோமசுந்தரம், முத்துலிங்கம், சந்திரமோகன், மனோகரன், சங்கர், தமிழ் செல்வன், கோபால், ராஜா, சேக் மைதீன், உமாசங்கர், வெண்ணிலா சேகர், மாணிக்கம், விஜயகுமார், ரத்தினவேல், சக்கரவர்த்தி,மாதேஸ்வரன், ராஜேந்திரன், சிவராமன், தங்க மருதமுத்து, டாக்டர் செழியன், மூர்த்தி சிவராமன், மணி, பாலமுருகன், சித்தார்த்தன், நகர செயலாளர்கள் பாலசுப்பிரமணியம்,வேல் முருகன் பேரூர் செயலாளர்கள் செல்வம், பாபு, செல்வராஜ், வெங்கடேஷ், பாலமுருகன், சரவணன், ராஜேந்திரன், ரவிச்சந்திரன், காங்கமுத்து, சண்முகம், வேலு, முருகப்பிரகாஷ் மற்றும் அனைத்து மாதகுருமார்கள், சார்பு அணி நிர்வாகிகள், கழக முன்னோடிகள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தடா தனசேகரன்

**பிப்ரவரி 6 (1992)**



ஜெயலலிதா அரசின் "தடா" சட்டத்தைக் கண்டித்து சென்னையில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்டு உயிரிழந்தார் சென்னை 3வது வட்ட இளைஞர் அணியின் தம்பி தனசேகரன்.

"தம்பி! உன் தியாகம்; தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைத்து; தடா தர்பார் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கான முன்னுரையாக அமையட்டும்! எனக் கூறி; "அந்த ஆதிதிராவிட இனத்து அடலேறாம் தனசேகரனுக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக" என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**



கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தலைமைக் கழகத்தின் அறிவுறுத்தலின்படி திருச்சி தெற்கு மாவட்ட கழகத்தின் சார்பாக மணப்பாறை தொகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலை அடிக்கல் நாட்டு விழா நேற்று முன்தினம் (04/02/2024) திருச்சி திண்டுக்கல் பைபாஸ் சாலையில் காய்கறி சந்தை மற்றும் மாட்டு சந்தை அருகில் திருச்சி தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், மாவட்டக் கழக அவைத் தலைவர் கோவிந்தராஜ், மணப்பாறை நகரக் கழகச் செயலாளர் மு.ம.செல்வம், நகர மன்ற தலைவர் கீதா மைக்கேல் ராஜ், ஒன்றிய கழகச் செயலாளர் ராமசாமி, ஒன்றிய பெருந்தலைவர் அமிர்தவள்ளி ராமசாமி, மற்றும் மணப்பாறை ஒன்றிய, நகர,பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



அரியலூர் மாவட்டம் குன்னம் தொகுதி செந்துறையில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது நினைவு நாளை முன்னிட்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு, மாவட்ட கழக செயலாளர் – அமைச்சர் சா.சி.சிவசங்கர் அமைதி ஊர்வலமாக வந்து மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் ச.அ.பெருநற்கிள்ளி, ஒன்றியச் செயலாளர்கள் பூ.செல்வராஜ், வி.எழில்மாறன், கோ.அறிவழகன், ஆர்.கலியபெருமாள், மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன், பொதுக்குழு உறுப்பினர் சுமதி கருணாநிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் செல்வம், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் பானுமதி இராஜேந்திரன், மகளிர் அணி சித்ரா, இலக்கியா மற்றும் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

### ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில்

# ரூ.6.24 கோடி மதிப்பிலான பல்வேறு புதிய திட்டப் பணிகள்!

## அமைச்சர் சா.சி.சிவசங்கர் அடிக்கல் நாட்டினார்!

பெரம்பலூர்,பிப்,6-

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் கிழக்கு ஒன்றியத்தில் போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ரூ.6.24 கோடி மதிப்பீட்டில் பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் போக்குவரத்துத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதிலிருந்து ஏழை எளிய அடித்தட்டு மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த எண்ணிலடங்கா திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்கள்.

பெரம்பலூர் மாவட்ட மக்கள் பயன்பெறும் வகையில் அரசின் திட்டங்கள் அனைத்து பகுதிகளிலும் முறையாக செயல்படுத்தப் பட்டு வருகின்றது. பொதுமக்கள் வைக்கின்ற கோரிக்கைகளுக்கு உடனுக்குடன் தீர்வு காணப்பட வேண்டும் பொது மக்களின் கோரிக்கைகள் நேரடியாக அரசு அலுவலர்களை சென்று சேர வேண்டும் என்ற உன்னத நோக்கில் அரசு அலுவலர்களை தேடி பொதுமக்கள் சென்ற காலத்தை மாற்றி "உங்களை தேடி உங்கள் ஊரில்" என்ற சிறப்பு திட்டத்தை செயல்படுத்தி, மாவட்ட ஆட்சியர், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் உள்பட அனைத்துத் துறைகளின் முதன்மை அலுவலர்களும் கிராமங்களில் 24 மணி நேரம் தங்கி இருந்து அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு செய்து, பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்து, அவற்றை நிறைவேற்றிடும் வகையிலான திட்டத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி இருக்கிறார்கள். இந்தத் திட்டம் அனைத்து தரப்பு மக்களிடத்திலும் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

மக்களின் தேவைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றும் வகையில் திட்டங்களை செயல்படுத்த வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில் இன்று ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பிலிமிசை ஊராட்சியில் ரூ.16.75 லட்சம் மதிப்பீட்டில் 30,000லி கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணியினையும், கூடலூர் ஊராட்சியில் ரூ.33.43 லட்சம் மதிப்பீட்டில் 1,00,000லி கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டும் பணியினையும், நொச்சிக்குளம் ஊராட்சியில், தமிழ்நாடு கிராமப்புற சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தின் (20212022) கீழ் ரூ.60.73 லட்சம் மதிப்பீட்டில் நொச்சிக்குளம் முதல் அரியலூர் வரை செல்லும் வகையில் தார் சாலை அமைக்கும் பணியினையும், அணைப்பாடி ஊராட்சியில், நெடுஞ்சாலைத்துறை சார்பில் ரூ.1.78 கோடி மதிப்பீட்டில் அணைப்பாடி சாலை முதல் கொளக்காநத்தம் - கருடமங்கலம் இணைப்பு சாலையினை தார் சாலை போடும் பணியினையும், கொளக்காநத்தம் ஊராட்சியில் பொதுப்பணித்துறை சார்பில் ரூ.1.53 கோடி மதிப்பீட்டில் கொளக்காநத்தம் துணை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டும் பணியினையும், என பல்வேறு பகுதிகளில் மொத்தம் ரூ.5.46 கோடி மதிப்பீட்டில் 11 புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது.

இந்த பணிகள் அனைத்தும் மிக விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் வகையில் பணிகளை துரிதமாக மேற்கொள்ள துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் ஜெமின்பேரையூர் ஊராட்சி அரசு உயர்நிலைப் பள்ளியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.29 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட சுற்றுச்சுவர் மற்றும் கொளத்தூர் ஊராட்சியில் ரூ.48.50 லட்சம் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட சிறுபாலம் உள்ளிட்டவைகள் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைத்துள்ளோம்.

தமிழ்நாட்டின் வளர்ச்சிக்காகவும், பொதுமக்கள் நலன் கருதியும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங் களை பொதுமக்கள் முறையாக, முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

இந்நிகழ்வுகளில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அ.லலிதா, ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவரும் ஆலத்தூர் கிழக்கு ஒன்றிய செயலாளருமான என். கிருஷ்ணமூர்த்தி, வட்டாட்சியர் சத்தியமூர்த்தி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில்

# பேரறிஞர் அண்ணா 55வது நினைவு நாள்!

நீலகிரி, பிப். 6-

அறிவுலக ஆசான், பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு நாளை முன்னிட்டு நீலகிரி மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட கழக அலுவலகமான உதகை கலைஞர் அறிவாலய முகப்பில் உள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவ சிலைக்கு மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார் தலைமையில், தேர்தல் பணி செயலாளரும், சுற்றுலாத்துறை அமைச்சருமான கா.ராமசந்திரன் மலர் அஞ்சலி செலுத்தும் நிகழ்ச்சி நடைபெற்றது.

மாவட்ட பொருளாளர் நாசர்அலி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ராஜூ, மாநில பொறியாளர் அணி துணை செயலாளர் பரமேஸ்குமார், உதகை நகர செயலாளர் ஜார்ஜ், உதகை நகராட்சி தலைவர் வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

முன்னதாக நிர்வாகிகள் அனைவரும் பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நிகழ்ச்சியில் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ராஜா, காந்தல் ரவி, எல்கில் ரவி, செல்வராஜ், ராமசந்திரன், நகர அவைத் தலைவர் கோபி, உதகை நகர துணை செயலாளர்கள் கிருஷ்ணன், ரீட்டா மேரி, நகர பொருளாளர் அணில்குமார், மாவட்ட பிரதிநிதிகள் கார்திக், தம்பி இஸ்மாயில், மாவட்ட துணை அமைப்பாளர்கள் நாகராஜ், ரமேஷ், ரகுபதி, கஜேந்திரன், மல்லிகொரை மூர்த்தி, செல்வராஜ், கீதா, நாகமணி, மஞ்சுகுமார், காளி, ராமன், மத்தீன், மாவட்ட கவுன்சில் செயலாளர் ஜெயராமன், கோபால், அருண், ஆட்டோ பாபு, அமலநாதன், விஜயகுமார், மார்கெட் ரவி, செல்வராஜ், ராஜ்குமார், கனேஷ், பெரியசாமி, உதகை நகரமன்ற உறுப்பினர் மேரி பிளோரீனா, பிரியா வினோதினி, பிளோரினா, விஷ்னு, திவ்யா மற்றும் கழக நிர்வாகிகள் ஏராளமானவர்கள் திரளாக கலந்துகொண்டனர்.

நிகழ்ச்சி முடிவில் உதகை நகர செயலாளர் ஜார்ஜ் நன்றி கூறினார்.



சேலம் கிழக்கு மாவட்ட அலுவலகத்தில் தளபதி மு.க.ஸ்டாலின் அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 55 வது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு பேரறிஞர் அண்ணாவின் திருவுருவப்படத்திற்கு கிழக்கு மாவட்ட துணை செயலாளர் சுரேஷ்குமார் தலைமையில் மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் சின்னதுரை, மாவட்ட அவைத்தலைவர் முரா. கருணாநிதி, மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளர் ஏ.ஏ.ஆறுமுகம் , மாவட்ட மாணவரணி அமைப்பாளர் முனைவர் அ.சீனிவாசன் ,பொதுக்குழு உறுப்பினர்கள் முத்துலிங்கம், தமிழ் செல்வன், சோமசுந்தரம், ஒன்றிய செயலாளர்கள் மாணிக்கம் ,சக்கரவர்த்தி ,மாதேஸ்வரன், ராஜேந்திரன் ,சிவராமன், தங்க மருதமுத்து, மூர்த்தி , சித்தார்த்தன், பாலமுருகன் , மணி நகர செயலாளர் பாலசுப்பிரமணியம், பேரூர் செயலாளர்கள் செல்வம், பாபு, வெங்கடேசன், மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கழக நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

### ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்தில்

# நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் சுற்றுப்பயணம்!

## மாவட்டச் செயலாளர் நா.கார்த்திக் - தொ.அ.ரவி - தளபதி முருகேசன் வேண்டுகோள்!







கோவை, பிப். 6-

கோவை மாநகர் மாவட்ட தி.மு.க. செயலாளர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச்செயலாளர் தளபதி முருகேசன் ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

கோவை பீளமேடு, அவினாசி சாலையில் உள்ள விஜய் எலான்சா ஹோட்டல் அரங்கில், தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்களின் அறிவுறுத்தலின் படி, 10.2.2024, அன்று, கழக நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவினர் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்பி., அவர்கள் தலைமையில்,

குழு உறுப்பினர்கள் கழக செய்தித் தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன், கழக விவசாய அணிச் செயலாளர் ஏ.கே.எஸ்.விஜயன், சொத்துப் பாதுகாப்புக்குழு செயலாளர், அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன், தகவல் தொழில் நுட்ப அணிச் செயலாளர், .அமைச்சர் டி.ஆர்.பி.இராஜா, வர்த்தகர் அணி துணைத் தலைவர் கோவி.செழியன் எம்.எல்.ஏ., மாநிலங்களவை கழக உறுப்பினர் கே.ஆர்.என்.ராஜேஸ் குமார், மாணவர் அணிச் செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ., அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா எம்.பி., மருத்துவ அணிச் செயலாளர் மருத்துவர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ., சென்னை மேயர் திருமதி.பிரியா ஆகியோர் ஒருங்கிணைந்த கோவை மாவட்டத்திற்கு உட்பட்ட தொழில் துறையினர், கல்வியாளர்கள், மீனவர்கள், சிறு,குறு தொழில் முனைவோர்கள், புலம்பெயர்ந்த தொழிலாளர்கள், மாணவர் சங்கங்கள், சூழலியலாளர்கள், மருத்துவர்கள், தொண்டு நிறுவனங்கள், அரசு மற்றும் தனியார் துறை ஊழியர்கள், பொதுமக்கள் மற்றும் கழக நிர்வாகிகள் உள்ளிட்ட அனைத்து தரப்பினரையும், நேரடியாகச் சந்தித்து, கீழ்க்கண்ட நேர அட்டவணைப்படி, அவர்களின் கோரிக்கைகளைப் பெறுவார்கள்.

10.2.2024, சனிக்கிழமை, காலை 9.30 - 10.30 - கோவை மாநகர் மாவட்டம்.

காலை 10.45 - 11.45 கோவை வடக்கு மாவட்டம்.

மதியம் 12.00 - 1.00 கோவை தெற்கு மாவட்டம்.


இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.



பேரறிஞர் அண்ணா அவர்களின் 55வது நினைவு தினத்தை முன்னிட்டு, கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வாழ்த்துக்களுடன், கரூர் மாவட்ட கழகச் செயலாளர் தமிழ்நாடு அமைச்சர் வி. செந்தில்பாலாஜி வழிகாட்டுதலின்படி, கரூரில், கரூர் கலைஞர் அறிவாலயத்தில் இருந்து, கரூர் பேருந்து நிலையம் நோக்கி கரூர் மாவட்ட திமுகவின் சார்பில் மாபெரும் அமைதி பேரணி நடைபெற்றது. அங்கு பேரறிஞரின் திருவுருவச்சிலைக்கு கழகத்தினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

**ஜோலார்பேட்டை நா. மணி**
**பிப்ரவரி 6 (2013)**



வேலூர் மாவட்டம்,
ஜோலார்பேட்டை பேரூர்
செயலாளர் மற்றும் நகரச்
செயலாளராக 31 ஆண்டுகள்
பொறுப்பேற்று கழகப்
பணியாற்றியவர்.

பேரூராட்சித் தலைவராக
இரண்டு முறை
தேர்ந்தெடுக்கப்பட்டு,
மக்கள் நலப் பணிகளை
மேற்கொண்டார்.

கழகம் அறிவித்த அனைத்து
அறப்போராட்டங்களிலும்
கலந்து கொண்டு சிறை
சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி, சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் பங்கேற்ற கழகத்தினர்.

## கழக அரசின் சாதனைகளை - திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லுங்கள்!

# ‘நாற்பதும் நமதே! நாடாளுமன்றமும் நமதே!’ என்பதே நமது இலக்கு!

## மத்திய சென்னை பாக முகவர்கள் ஆலோசனைக் கூட்டத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சூளுரை!

சென்னை, பிப். 6 –

**சென்னை – பெரியார் திடலில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி பாக முகவர் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றும் போது, “கழக அரசின் சாதனைகளை, திட்டங்களை மக்களிடம் கொண்டு செல்லுங்கள்” – “நாற்பதும் நமதே! நாடாளுமன்றமும் நமதே” என்ற குறிக்கோளுடன் பணியாற்றுங்கள்” என்று வேண்டுகோள் விடுத்தார்.**

**மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதிக்கு உட்பட்ட துறைமுகம், எழும்பூர், வில்லிவாக்கம் ஆகிய மூன்று சட்டமன்றத் தொகுதிகளுக்கு உட்பட்ட பாக முகவர்களின் ஆலோசனைக் கூட்டம், நேற்று மாலை, சென்னை வேப்பேரி பெரியார் திடலில் நடைபெற்றது.**

**சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும் அமைச்சருமான பி.கே.சேகர்பாபு ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு பாக முகவர்களுக்கு ஆலோசனைகள் வழங்கி பேசினார்.**

அப்போது அவர் குறிப்பிட்டதாவது :–

“முதலில் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். சென்ற மாதம் ஜனவரி 21ஆம் தேதி சேலத்தில் இளைஞர் அணியின் இரண்டாவது மாநில மாநாட்டை வெகு சிறப்பாக, எழுச்சியோடு நடத்திக் காட்டி இருக்கிறோம். கிட்டத்தட்ட ஏழு லட்சம் இளைஞர்கள் அந்த மாநாட்டில் கலந்து கொண்டிருக்கிறார்கள். இரண்டு இலட்சம் பேர் மாநாட்டுத் திடலுக்குள்ளேயே வர முடியாத அளவிற்கு கூட்டம்.

### இந்தியாவின் கவனத்தை ஈர்த்த இளைஞர் அணி மாநாடு!

ஒட்டுமொத்த இந்தியாவுமே அன்றைக்கு நம்முடைய மாநாட்டைத்தான் உற்று நோக்கிக் கொண்டிருந்தார்கள். மாநாட்டின் பெயரே மாநில உரிமைகள் மீட்பு மாநாடு. அதனால் என்னென்ன தீர்மானங்கள் நிறைவேற்றப் போகிறோம், தலைவர் அவர்கள் என்ன பேசப் போகிறார், ஒவ்வொரு பேச்சாளர்களும் என்ன பேசுகிறார்கள். நிகழ்ச்சிகளை எப்படி நடத்தப் போகிறார்கள் என்று எல்லோருமே கூர்ந்து கவனித்தார்கள். ஒரு எழுச்சி மாநாட்டை, வெற்றி மாநாட்டை நடத்தி முடித்திருக்கிறோம்

சென்னை கிழக்கு மாவட்டத்திலிருந்து கலந்து கொண்ட இளைஞர் அணித் தம்பிமார்களுக்கும், அதை ஒருங்கிணைத்த மாவட்டச் செயலாளர் அமைச்சர் அண்ணன் சேகர்பாபு அவர்கள் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகளுக்கும் இந்த நேரத்தில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இங்கு எனக்கு முன்பு பேசிய அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் தனக்கே உரிய பாணியில் சூசகமாக, வரும் தேர்தலில் வாய்ப்பு கிடைத்தால் போட்டி போடுவேன் என்று சொன்னார். அவருக்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை என்றால் சென்னை கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் விட்டு விடுவீர்களா? அவரே வேறு தொகுதிக்குப் போக வேண்டும் என்று நினைத்தால்கூட நீங்கள் விடமாட்டீர்கள். யார் வேட்பாளர் என்பதை தலைவர் அவர்கள்தான் அறிவிப்பார்கள். ஆனால் யார் வேட்பாளராக அறிவித்தாலும் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நினைவில் கொள்ளவேண்டும். அதை நோக்கித்தான் நாம் பயணம் பண்ண வேண்டும். ஆம், நாடாளுமன்றத் தேர்தலில் புதுச்சேரியையும் சேர்த்து 40 தொகுதிகளிலும் போட்டியிடுவது முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் என்ற அந்த ஒரு எண்ணத்தோடுதான் நாம் அனைவரும் களப்பணி ஆற்ற வேண்டும். கண்டிப்பாக தலைவர் அவர்கள் உங்களுக்கு நல்ல ஒரு வலுவான வேட்பாளரை, சிரித்த முகம் கொண்ட ஒரு வேட்பாளரை வெற்றி வேட்பாளரை உங்களிடத்தில் ஒப்படைப்பார். நீங்கள் நிச்சயமாக அவரை வெற்றி பெறச் செய்து விடுவீர்கள், எனக்குத் தெரியும். நான் கேட்பதெல்லாம் வாக்கு வித்தியாசம் மட்டும்தான். சென்ற முறை மூன்று லட்சத்து 6 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் அண்ணன் தயாநிதி மாறன் அவர்களை ஜெயிக்க வைத்தீர்கள்.

அந்தத் தேர்தலுக்குப்பிறகு தொடர்ந்து கழகப் பணி, மக்கள் பணி ஆற்றியிருக்கிறோம். கோவிட் காலத்தில் மக்களோடு மக்களாக நின்றோம். ஒவ்வொரு மழை வெள்ள காலத்திலும் மக்களோடு மக்களாக நின்று அவர்களை தைரியமாக எதிர்கொள்கிறோம். அந்த தைரியத்தோடுதான் மீண்டும் இந்தத் தேர்தலில் களத்தில் நிற்கிறோம்.

### அமைச்சர் – அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு நன்றி!

அதேபோல் இங்கே வரவேற்கும்போதும்கூடச் சிலர் என்னை பட்டப்பெயர் வைத்து அழைத்தீர்கள். அதில் கொஞ்சம் கூட எனக்கு உடன்பாடு கிடையாது. ‘சின்னவர்’ என்று கூப்பிடுகிறீர்கள். வயதிலும் அனுபவத்திலும் உங்களைவிட உண்மையாகவே நான் சின்னவன்தான். அதற்காக சின்னவர், இளைய கலைஞர், வாலிப பெரியார் என்றெல்லாம் அழைப்பதை தயவு செய்து தவிர்த்து விடுங்கள். நான் உங்களுடைய உறுப்பினர், இளைஞர் அணிச் செயலாளர், அமைச்சர்.. என்ற இந்தப் பொறுப்பெல்லாம் இன்றைக்கு வரும் நாளைக்குப் போய்விடும். ஆனால் எப்போதும் உங்கள் வீட்டுப் பிள்ளையாக, உங்கள் வீட்டு செல்லப் பிள்ளையாக இருக்கவே நான் ஆசைப்படுகிறேன். அதுதான் நிரந்தரம். இப்போது அமைச்சராக இருப்பதால் கொஞ்சம் கொஞ்சமாக செல்லப் பிள்ளையாக இருக்க முயற்சிக்கிறேன். தயவுசெய்து பட்டப்பெயர் வைத்து அழைப்பதை தவிர்த்து விடுங்கள். இந்த நிகழ்ச்சியை பெரியார் திடலில் ஏற்பாடு செய்ததற்காக அண்ணன் சேகர்பாபு அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும்.



மத்திய சென்னை நாடாளுமன்றத் தொகுதி, சென்னை கிழக்கு மாவட்டத்துக்கு உட்பட்ட துறைமுகம், வில்லிவாக்கம் மற்றும் எழும்பூர் சட்டமன்றத் தொகுதிகளைச் சேர்ந்த பாக நிலை முகவர்கள் ஆலோசனைக் கூட்டம், நேற்று முன்தினம் மாலை, சென்னை–பெரியார் திடலில், மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சருமான பி.கே.சேகர்பாபு நிகழ்ச்சி ஏற்பாட்டில் சிறப்புற நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக இளைஞரணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். தயாநிதி மாறன் எம்.பி., பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், அ.வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் எம்.எல்.ஏ. கே.எஸ்.ரவிச்சந்திரன் மற்றும் தலைமைக் கழக தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிக் கழக – வட்டக் கழகச் செயலாளர்கள், பாகநிலை முகவர்கள் உள்ளிட்டோர் இதில் கலந்துகொண்டார்கள்.

அண்ணன் தயாநிதி மாறன் அவர்கள் சொன்னதைப் போல் தொடர்ந்து பாக முகவர்கள் மாநாட்டினை தலைவர் அவர்கள் ஒவ்வொரு மண்டலமாக சென்று நடத்தினார்கள். இன்றைக்கு நாம் சந்திக்கப் போகின்ற நாடாளுமன்றத் தேர்தலுக்கு தமிழ்நாட்டிலேயே ஒரு மாவட்டத்தில் பாக முகவர்கள் கூட்டம் முதலில் நடக்கிறது என்றால், அது இந்த சென்னை கிழக்கு மாவட்டத்தில்தான்.

### அமைச்சர் சேகர்பாபு தொடங்குவது அனைத்தும் வெற்றியில் முடியும்!

**சேகர்பாபு அண்ணன் ஆரம்பித்து வைத்தார் என்றால். அது எப்போதுமே வெற்றியில் தான் முடியும். இன்றைக்கு அவர் ஆரம்பித்து வைத்திருக்கிறார். உதயசூரியனும் கிழக்கில்தான் உதிக்கும், கிழக்கு மாவட்டத்தில் இன்றைக்கு பாக முகவர்கள் கூட்டத்தை ஆரம்பித்து வைத்திருக்கிறோம். கைதட்டினால் மட்டும் பத்தாது; கைகோர்த்து ஒற்றுமையாக வேலை செய்ய வேண்டும்.**

இந்தத் தேர்தல் பணியை நம்முடைய தலைவர் அவர்கள் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு முன்பே ஆரம்பித்து விட்டார். மூன்று குழுக்கள் அமைத்தார். அதில் ஒருங்கிணைப்புக் குழுவில் நான் இருக்கிறேன். ஒவ்வொரு தொகுதியாகச் சந்தித்து அதில் இருக்கக்கூடிய நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் வரச் சொல்லி கிட்டத்தட்ட ஒன்றரை மணி நேரம் இரண்டு மணி நேரம் ஒவ்வொரு நாளும் நான்கு தொகுதிகளைச் சந்திக்கிறோம். தொகுதியில் இருக்கக்கூடிய சின்ன சின்ன பிரச்சனைகள், மனக் கசப்புகள், தொகுதிப் பிரச்சனைகள், வெற்றி வாய்ப்புகள் என்று இப்படி தொடர்ந்து கலந்துரையாடிக் கொண்டிருக்கிறோம். இன்றோடு 36 தொகுதி முடித்து விட்டோம். மீதியுள்ள 4 தொகுதிகளையும் நாளை முடித்துவிடுவோம். அந்த ஆலோசனைக் கூட்டத்தில் நிர்வாகிகள் சொன்னதை வைத்துப் பார்த்தால் நிச்சயம் 40க்கு 40 ஐ நாம்தான் வெற்றிபெற போகிறோம்.

### உழைப்பை வெற்றியாக மாற்றும் பொறுப்பு பாகமுகவர்களுக்கு உண்டு!

இதைத்தவிர தொகுதிப் பங்கீட்டுக் குழு, தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு என தனியாக 2 குழுக்கள் உள்ளன. இப்படி மூன்று குழுக்கள் தனித் தனியாக இறங்கி கழக வேலையைச் செய்து கொண்டிருக்கிறோம் என்றால் நாங்கள் வைத்திருக்கின்ற ஒரே நம்பிக்கை பாக முகவர்கள் ஆகிய நீங்கள்தான். நாங்கள் எவ்வளவுதான் பயணம் செய்தாலும், என்னதான் பணிகள் செய்தாலும் அதை வெற்றியாக மாற்றக்கூடிய வாய்ப்பு அது உங்கள் கையில் மட்டும்தான் இருக்கிறது.

இன்றைக்கு நம்முடைய சேகர்பாபு அண்ணன் மூன்று தொகுதிகளைச் சேர்ந்த 708 பேருக்கு எழுதும் அட்டை, குறிப்பேடு, பேனா, வாக்காளர் பட்டியல், ஊக்கத்தொகை ஆகியவற்றைக் கொடுத்திருக்கிறார். இப்போது அனைத்து மாவட்டக் கழகச் செயலாளர்களும் இதைப் பின்பற்றியே ஆகவேண்டும். நான், தலைவர், மாவட்டச் செயலாளர்கள் ஆகிய நிர்வாகிகள் வாக்காளர்களிடம் ஓரளவுக்குதான் பிரச்சாரத்தைக் கொண்டு போய் சேர்க்க முடியும். ஆனால், பாக முகவர்களாகிய நீங்கள்தான் ஒவ்வொரு வாக்காளர்களின் வீட்டுக்குள்ளேயே சென்று அவர்களுடன் பேசி அவர்களை ஏன் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்களிக்க வேண்டும். ஏன் ஒன்றிய பா.ஜ.க.வை விரட்டியடிக்க வேண்டும் என்ற அந்தப் பிரச்சாரத்தை நீங்கள் தான் செய்ய வேண்டும். உங்களால் மட்டும்தான் செய்ய முடியும்.

தேர்தல் நாள் அன்றைக்கு யார், யார் விடுபட்டுப் போய் இருக்கிறார்கள். யார் யார் இன்னும் வாக்களிக்க வரவில்லை, எந்தெந்த வீடுகளில் இருந்து யார்யார் இன்னும் வரவில்லை என்று அவர்களை வீட்டுக்குகே சென்று கூட்டிக் கொண்டு வந்து உதய சூரியன் சின்னத்தில் ஓட்டு வாங்குகின்ற வரைக்கும் உங்களுடைய பணி. அதன்பிறகு வாக்கு எண்ணிக்கையில் வெற்றிபெறும் வரை உங்களுடைய பணி இருக்கிறது.

இந்த இரண்டரை வருட தி.மு.க ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் கொண்டு போய் சேர்க்க வேண்டும். ஞாபகப்படுத்திக் கொண்டே இருங்கள். கடும் நிதி நெருக்கடியில் ஆட்சிக்கு வந்தோம். ஆட்சிக்கு வந்து இரண்டரை வருடம் ஆகிவிட்டது. சொன்ன வாக்குறுதிகளையெல்லாம் எப்படி காப்பாற்றப் போகிறோம் என்று ஒட்டுமொத்த மக்களும் காத்துக் கொண்டிருந்தார்கள்.

தலைவர் அவர்கள் முதல் சாதனையாக மகளிருக்கு கட்டணமில்லாப் பேருந்து வசதியான விடியல் பயணத்துக்கு முதல் கையெழுத்துப் போட்டார். இந்தத் திட்டத்தினால் பயன்பெறுகின்ற மகளிர் மாதா மாதம் 900 ரூபாய் சேமிக்கிறார்கள். இதுவே வருடத்திற்கு கிட்டத்தட்ட 12 ஆயிரம் ரூபாய். அதேபோல் ‘புதுமைப்பெண்’ திட்டம், ‘நான் முதல்வன்’ என்ற திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், அதைவிட முக்கியம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்.

> **குடியரசுத் தலைவரை அழைக்காதது ஏன்?**
>
> **சமீபத்தில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்தார்கள். இந்த நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை நாடாளுமன்ற கட்டடத் திறப்பு விழாவுக்கு அழைக்கவில்லை. ஏனென்றால் அவர் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர், கணவரை இழந்தவர். அந்தக் காரணத்திற்காக அவரை அழைக்கவில்லை. ஆனால் செங்கோல் வைக்கிறோம் என்று இருக்கிற எல்லா சாமியார்களையும் அழைத்துக்கொண்டு சென்றார்கள்.**

கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தைத் துவங்க வேண்டும் என்று தலைவர் அவர்கள் சொல்லும் போது, முடியாது நிதி நெருக்கடி இருக்கிறது என்று அதிகாரிகள் கூறினர். பிறகு, ஒரு கோடி ரேசன் கார்டுகளுக்குள்தான் கொடுக்கமுடியும் என்றார். ஆனால், தகுதியுள்ள அனைத்து மகளிர்க்கும் கொடுக்க வேண்டும் என்று தலைவர் சொன்னார்.

### தகுதியுள்ள மகளிர்க்கு உரிமைத் தொகை!

இந்தத் திட்டத்திற்கு விண்ணப்பித்தவர்கள் எவ்வளவு பேர் தெரியுமா? ஒரு கோடியே 60 லட்சம் பேர். இப்போது இன்றைக்கு இந்தத் திட்டத்தின் மூலம் மாதாமாதம் ஒரு கோடியே 16 லட்சம் மகளிருக்கு தலா ஆயிரம் ரூபாய் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இந்தத் திட்டத்தில் தகுதியுள்ள சிலர் விடுபட்டிருக்கலாம். நம்முடைய கழக மகளிர் அணியினருக்குக் கூட கிடைக்காமல் இருக்கலாம். இப்படி தகுதியுள்ள யாருக்கெல்லாம் கிடைக்கவில்லையோ அவர்களுடைய பெயர், தொலைபேசி எண், ரேசன் கார்டு எண், முகவரியுடன் நம் கழக நிர்வாகிகள் மூலம் என்னிடம் கொடுங்கள். தகுதியுள்ள மகளிர்க்கு உரிமைத் தொகையைக் கொண்டு சேர்ப்போம். உரிமைத் தொகை 90 விழுக்காட்டினருக்குச் சேர்ந்துவிட்டது. அவர்கள் நம்மை பாராட்ட மாட்டார்கள். ஆனால் கிடைக்காமல் இருக்கிற 10 விழுக்காட்டினர்தான் குறை சொல்வார்கள். அதையும் கூடிய விரைவில் சரிசெய்வோம். டிசம்பர் மாதம் சென்னையில் பெரிய வெள்ளம் வந்தது என்பதும், தூத்துக்குடி நெல்லை மாவட்டங்களில் பெருமழை ஏற்படுத்திய பாதிப்புகள் என்ன என்பதும் உங்களுக்குத் தெரியும். அதற்கு இழப்பீடாக 6,000 ரூபாயை உடனடியாக வழங்கினார் தலைவர். இந்த 2 பாதிப்புகளுக்கும் சேர்த்து இழப்பீட்டுத் தொகையாக 35,000 கோடி ரூபாயை ஒன்றிய அரசிடம் கேட்டிருக்கிறோம். ஆனால் ஒன்றிய அரசு ஒரு பைசாகூட இதுவரை கொடுக்கவில்லை. இதைத்தான் நாம் எதிர்க்கிறோம், இதைத்தான் நாம் கேள்வி கேட்கிறோம்.

### உரிமைக்குக் குரல் கொடுப்போம்!

அடுத்து நம்முடைய தலைவர் யாரை முடிவு செய்கிறாரோ, தி.மு.க. யாரை முடிவு செய்கிறதோ அவர்தான் அடுத்த பிரதமர் என்ற நிலையை நாம் உருவாக்க வேண்டும். அ.தி.மு.க. அடிமைகள் போலத்தான் நாமும் இருப்போம் என்று நினைத்து நம்மை பயமுறுத்தப் பார்க்கிறார்கள். கடந்த 8 வருடங்களாக அ.தி.மு.க. ஆட்சியை எப்படி வைத்திருந்தார்கள்? சி.பி.ஐ., வருமான வரித்துறை, அமலாக்கத்துறையை வைத்து அவர்களை எப்படி பயமுறுத்தினார்களே, அதைப்போல நம்மையும் பயமுறுத்த முயற்சிக்கிறார்கள். அந்த உருட்டல், மிரட்டல்களுக்கெல்லாம் பயந்திட தி.மு.க. ஒன்றும் அடிமைகள் கூட்டம் இல்லை. உறுதியோடு எதிர்த்து நிற்போம். உரிமைக்கு குரல் கொடுப்போம்.

2019 நாடாளுமன்றத் தேர்தலில் நாம் எதிர்க்கட்சியாக இருந்தபோதே தமிழ்நாடு, புதுச்சேரி சேர்த்து நாற்பதுக்கு 39 தொகுதிகளில் வெற்றி பெற்றோம். அதேபோல உள்ளாட்சித் தேர்தலிலும் எதிர்க்கட்சியாக இருந்தபோதே மிகப்பெரிய வெற்றி பெற்றோம். நாம் ஆளுங்கட்சியான பிறகு சந்திக்கப் போகிற மிக முக்கியமான தேர்தல் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல். கடந்த நாடாளுமன்றத் தேர்தலை விட ஒரு வாக்கு குறைவாக வாங்கினால் கூட, தி.மு.க. அரசின் மீது மக்களுக்கு அதிருப்தி என்று எதிரணியினர் ஓட்டு குறைந்ததையே ஒரு பிரச்சாரமாக்கி விடுவார்கள். நாடாளுமன்றத் தேர்தலின் முடிவுகள், அடுத்துவரும் சட்டமன்றத் தேர்தலில் எதிரொலிக்கும். இதை நீங்கள் உணர்ந்து பணியாற்ற வேண்டும். எனவே நாற்பதுக்கு நாற்பது வென்று தலைவரிடம் கொடுத்தால், நாம் எதிர்பார்க்கிற பிரதமரை பதவியில் அமர்த்திவிட்டால், தமிழ்நாட்டுக்கு என்னென்ன தேவையோ அதையெல்லாம் கேட்டு வாங்கிவிடலாம். அந்த நிலைமையை பாக முகவர்களாகிய நீங்கள்தான் உருவாக்க வேண்டும்.

### தணிக்கைத் துறை சுட்டிக் காட்டும் – ஒன்றிய அரசின் மாபெரும் ஊழல்!

பா.ஜ.க. நம்மை குறைசொல்லிக் கொண்டிருக்கிறது. ஆனால் பா.ஜ.க. ஆட்சியின் ஊழல்களை சி.ஏ.ஜி. அறிக்கை (ஒன்றிய, மாநில அரசின் செலவுகளை தணிக்கை செய்யும் அமைப்பு) தெளிவாக வெளிக்காட்டியுள்ளது. கடந்த 9 ஆண்டுகளில் ஏழரை லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான ஒன்றிய அரசின் செலவுகளுக்கு முறையான கணக்கு இல்லை. அந்தப் பணம் எங்கே போனது என்று யாருக்கும் தெரியவில்லை! ஒரு கிலோ மீட்டர் சாலை போடுவதற்கு 250 கோடி ரூபாய் செலவு செய்திருப்பதாக ஒன்றிய பா.ஜ.க. அரசு கணக்குக் காட்டியுள்ளது. பல வருடங்களுக்கு முன்பு ‘ரமணா’ என்றொரு திரைப்படம் வந்தது, நீங்கள் பார்த்திருப்பீர்கள். அந்தப் படத்தில் ஒருவர் இறந்துவிடுவார், அதை மறைத்து உயிரோடுதான் இருக்கிறார் என்று சொல்லி, மாத்திரை மருந்து வாங்கிவரச் சொல்லி பணம் கட்ட வைப்பார்கள். பணத்தை வசூலித்த பிறகுதான் இறந்ததைச் சொல்வார்கள். இப்படி நாம் திரையில் பார்த்ததை ஒன்றிய பா.ஜ.க. அரசு நிஜத்தில் செய்து காட்டியிருக்கிறது.

இறந்துபோன 88,000 பேருக்கு ஆயுஷ்மான் பாரத் திட்டத்தின் கீழ் காப்பீடு செய்ததாகக் கணக்குக் காட்டியிருக்கிறார்கள். அதுவும் ஒரே எண்ணில் இந்த மோசடியைச் செய்திருக்கிறார்கள். இதையெல்லாம் ஒவ்வொன்றாக நம்முடைய தலைவர் கேட்கிறார். இதற்கெல்லாம் பதில் சொல்ல ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு துப்பில்லை.

நிதி கேட்டதற்கு மரியாதைக்குரிய ஒன்றிய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அவர்கள் என்னை விமர்சிக்கிறார். “உங்கள் அப்பா வீட்டு காசையா கேட்டோம்?” என்று கேட்டதில் என்ன தவறு இருக்கிறது? அதற்கு டெல்லியில் ஒரு பத்திரிகையாளர் சந்திப்பு வைத்து, உதயநிதி மரியாதையாகப் பேசக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று எனக்கு ஒரு பெரிய பாடமே எடுத்தார். “மரியாதைக்குரிய அம்மா அவர்களே, மாண்புமிகு உங்கள் அப்பா வீட்டின் பணத்தை நான் கேட்கவில்லை. எங்கள் தமிழ்நாட்டு மக்கள் கொடுத்திருக்கக்கூடிய வரிப் பணத்தைதான் கேட்கிறேன்.” என்று மறுநாளே நான் மரியாதை கொடுத்துவிட்டேன். நீங்கள் கேட்ட மரியாதையை நான் கொடுத்துவிட்டேன், நாங்கள் கேட்ட நிதியை எப்போது கொடுப்பீர்கள்?

இன்னொரு உதாரணத்தையும் சொல்கிறேன். சமீபத்தில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தைத் திறந்தார்கள். இந்த நாட்டின் முதல் குடிமகனான குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை நாடாளுமன்ற கட்டடத் திறப்பு விழாவுக்கு அழைக்கவில்லை. ஏனென்றால் அவர் பழங்குடி சமூகத்தைச் சேர்ந்தவர், கணவரை இழந்தவர். அந்தக் காரணத்திற்காக அவரை அழைக்கவில்லை. ஆனால் செங்கோல் வைக்கிறோம் என்று இருக்கிற எல்லா சாமியார்களையும் அழைத்துக்கொண்டு சென்றார்கள்.

10 நாட்களுக்கு முன்பு இன்னொரு நிகழ்ச்சி நடைபெற்றது. அயோத்தியில் ராமர் கோயிலைக் கட்டியிருக்கிறார்கள். தி.மு.க. எந்த மதத்துக்கோ, வழிபாட்டுக்கோ எதிரான கட்சியல்ல. எங்களுக்கு ‘‘ஒன்றே குலம், ஒருவனே தேவன்’’. நீங்கள் கோவில் கட்டினால் தமிழ்நாட்டு மக்கள் நன்றாக வழிபடுவார்கள். ஆனால் தேர்தல் என்று வந்துவிட்டால் உதயசூரியன் சின்னத்துக்குத்தான் வாக்களிப்பார்கள். அதைப் புரிந்துகொள்ளுங்கள்.

### மன்னிப்பு கேட்க மாட்டேன்! நான் கலைஞரின் பேரன்!

இந்த ராமர் கோயில் திறப்பு விழாவுக்கு சாமியார்கள் யாருமே செல்லவில்லை. மோடி வருகிறார், அதனால் நாங்கள் யாரும் வரமாட்டோம் என்று சங்கராச்சாரியார்கள் சொல்லிவிட்டார்கள். இதைத்தான் 4 மாதங்களுக்கு முன்பு நான் சொன்னேன். அனைவரும் சமம் என்று அப்போது நான் ஒன்றியப் பிரதமருக்கும் சேர்த்துப் பேசியிருக்கிறேன். அதற்காக வழக்கு நடந்துகொண்டிருக்கிறது, ‘‘மன்னிப்புக் கேட்க மாட்டேன். நான் கலைஞரின் பேரன். சொன்னால் சொன்னதுதான்!’’ என்று சொல்லிவிட்டேன். என் மீது தவறு இல்லை, பிறப்பால் அனைவரும் சமம். இங்கு ஜாதி, மத பாகுபாட்டுக்கு இடமில்லை. நீதிமன்றத்தின் மீது எனக்கு நம்பிக்கை இருக்கிறது.

இங்கே ஒரு அடிமைகள் கோஷ்டி இருக்கிறது. ஓ.பி.எஸ்.தான் முதலில் கைதாவார் என்று எடப்பாடி பழனிசாமி சொல்கிறார். எடப்பாடி பழனிசாமிதான் கைதாவார் என்று அதேநாள் மாலையில் ஓ.பி.எஸ். சொல்கிறார். இரண்டு பேரும் ஒன்றாகத்தான் கைதாகப் போகிறார்கள் என நான் நினைக்கிறேன். கைதாகி சிறைக்குப் போகும்போதாவது தவழ்ந்து தவழ்ந்து செல்ல வேண்டாம், கால் வலி வரும் என்ற கோரிக்கையை மட்டும் நான் அவர்களுக்கு வைக்கிறேன்.

### ஒவ்வொரு வீட்டிலும் உண்டு – திராவிட மாடல் அரசின் திட்டங்கள்!

அ.தி.மு.க.வினர் நிலைமையை யோசித்துப் பார்த்தால் மிகவும் பாவமாக இருக்கிறது. அ.தி.மு.க.வின் நிறுவனரும் கலைஞரின் நெருங்கிய நண்பருமான மறைந்த முதலமைச்சர் எம்ஜிஆருக்கு டிசம்பர் 24ஆம் தேதி நினைவுநாள். அதனையொட்டி திருப்பத்தூர் மாவட்டத்தில் ஒரு நிகழ்ச்சி நடத்தினார்கள். அதற்காக மாவட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் அடித்த போஸ்டரில் எம்.ஜி.ஆருக்கு பதிலாக நடிகர் அரவிந்த் சாமியின் புகைப்படத்தை வைத்திருக்கிறார்கள். இதைச்சொன்னால் கூட யாரும் நம்ப மாட்டார்கள், ஆனால் உண்மையாக நடந்தது. தலைவர் எம்.ஜி.ஆரா? அல்லது அரவிந்த் சாமியா? என்றுகூட தெரியாத அளவில்தான் அ.தி.மு.க. இன்றைக்கு இருக்கிறது. இதற்குமேல் அந்த கட்சியைப் பற்றி என்னவென்று சொல்வது? அவர்களை எதிர்த்துதான் நாம் அரசியல் செய்ய வேண்டியிருக்கிறது.

**நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி பாக முகவர்களான உங்கள் கையில்தான் இருக்கிறது. மக்களோடு மக்களாகப் பழகுங்கள், அவர்களின் பிரச்சினையைக் கேளுங்கள். உங்களால் தீர்க்க முடிந்த பிரச்சினை களை நீங்களே தீர்த்து வையுங்கள், முடியாவிட்டால் வட்டக் கழகச் செயலாளர், பகுதிக் கழகச் செயலாளர், மாவட்டச் செயலாளர், அமைச்சரிடம் கொண்டுசென்று தீர்த்து வையுங்கள். வாக்காளர் பட்டியலைச் சரிபாருங்கள். கழக ஆட்சியின் திட்டங்கள், சாதனைகளை ஒவ்வொரு வீட்டுக்குள்ளும் கொண்டுசேருங்கள். ஒவ்வொரு வீட்டிலும் நிச்சயம் திராவிட மாடல் அரசின் ஒரு பயனாளி இருப்பார். அவர்களிடம் அதனை எடுத்துச் சொல்லுங்கள்.**

### சூப்பர் டூப்பர் செயல்பாபு!

இந்த நிகழ்ச்சியை சிறப்பாக ஒருங்கிணைத்திருக்கிற அண்ணன் சேகர்பாபு அவர்களைப் பற்றிச் சொல்ல வேண்டும். சேகர்பாபு அல்ல, செயல்பாபு என்று நம்முடைய தலைவரே பலமுறை சொல்லியிருக்கிறார். வெறும் செயல்பாபு அல்ல, சூப்பர் செயல்பாபு என்று நானும் பலமுறை சொல்லியிருக்கிறேன். இப்போது சொல்கிறேன், வெறும் சூப்பர் செயல்பாபு அல்ல, சூப்பர் டூப்பர் செயல்பாபு அவர். இவ்வளவு சிறப்பாக இந்நிகழ்ச்சியை ஒருங்கிணைத்த அண்ணன் செயல்பாபு அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துகள்.

2021**இல் அடிமைகளை விரட்டி வீட்டுக்கு அனுப்பினோம். இப்போது இந்தத் தேர்தலில் அடிமைகளின் முதலாளிகளையும் வீட்டுக்கு அனுப்ப வேண்டும். நமக்கு இருக்கிற ஒரே குறிக்கோள் நாடாளுமன்றத் தேர்தல் வெற்றி. நாற்பதும் நமதே, நாடாளுமன்றமும் நமதே. நன்றி, வணக்கம்.**


இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

இந்த நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சென்னை மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் இ.பரந்தாமன், வெற்றி அழகன், ஜோசப் சாமுவேல், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மணிமுடி, இரவிச்சந்திரன், சட்டமன்றத் தொகுதி பார்வையாளர்கள் நாகலிங்கம், பிரபு, கௌதம் உள்பட கழகத்தினர் பலர் கலந்துகொண்டனர்.

முன்னதாக பாக முகவர்களுக்கு பாகவாரியாக வாக்காளர் பட்டியல், குறிப்பேடு மற்றும் நிதியுதவியை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

# புதிய தமிழ்நாடும் கலைஞரும்...

■ நீரை.மகேந்திரன்



1986 ஆம் ஆண்டு கும்பகோணம் நகரத்தில் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் ஒரு மருத்துவ மனையைத் திறந்து வைத்து உரையாற்றிய காணொலியை சமீபத்தில் பார்க்க முடிந்தது. அந்த உரையில் வெளிநாட்டு மருத்துவமனைகள் வெற்றிபெறுவதற்குக் காரணம் நவீன மருத்துவக் கருவிகள். அத்தகைய மருத்துவக் கருவிகள் தமிழ்நாட்டிலும் வர வேண்டும் என அந்த உரையில் தனது ஆர்வத்தைக் குறிப்பிடுகிறார்.

அப்போது, தமிழ்நாட்டில் அரசு மருத்துவர்கள் பெருகத் தொடங்கி இருந்த காலம். மருத்துவக் கருவிகளுக்கான முன்னேற்றம் குறித்து அவர் குறிப்பிட்டார்.

## முன்னேற்றங்களின் ஆசை

தமிழ்நாட்டில் அவ்வளவு எளிதாக யாரும் மருத்துவப் படிப்பு படிக்க முடியாது என்ற நிலையை மாற்றி, அரசு மருத்துவக் கல்லூரி இடங்களையும், மருத்துவக் கட்டமைப்புகளையும் உலகத் தரத்துக்கு உயர்த்தியது அவர்தான். 1986 ஆம் ஆண்டு உரையில் கூறுவது போல நவீன மருத்துவ சாதனங்களுக்கான கனவு, அவர் வழியே தமிழ்நாட்டை வந்தடைகிறது எனலாம்.

அதற்கு முன் அவர் ஆட்சியில் இருந்த காலத்தில் 1975 ஆம் ஆண்டில் ஒரு பத்திரிகை நேர்காணலில் கூறுகிறார்.

“வெளிநாடுகளைப் போல அற்புத விஞ்ஞான முன்னேற்றங்கள் தமிழ்நாட்டுக்கு வர வேண்டும் என்று ஆசை இருந்தாலும், அதற்கு நீண்ட காலம் பிடிப்பதைப் பற்றிக் கூட எனக்குக் கவலை இல்லை. எங்கள் நோக்கமெல்லாம் இங்குள்ள சாதாரண மக்களை மகிழ்ச்சியோடும் உற்சாகத்தோடும் வாழச் செய்ய வேண்டும் என்பதுதான்” எனக் குறிப்பிடுகிறார்.

‘நெஞ்சுக்கு நீதி’ நூலில் இதைக் குறிப்பிடும் கலைஞர், பழைய தமிழ்நாடு, புதிய தமிழ்நாடு, மக்கள் நிலை, அறிவு வளர்ச்சி, இலக்கிய இன்பம், அரசியல் அலைகள் அனைத்தையும் குறிப்பிட்டு, தொடர் எழுத வேண்டும் என ஆசைப்பட்டு ‘நெஞ்சுக்கு நீதி’ எழுதத் தொடங்கியதாக சொல்கிறார்.

கலைஞர் 1975 இல் குறிப்பிட்டது போல ‘பழைய தமிழ்நாடு’, ‘புதிய தமிழ்நாடு’ என அவர் காலத்தில் இருந்தே தொட்டுக்காட்டிய பல ஒப்பீடுகளை சமகாலம் வரையிலும் எழுதலாம். அதில் கலைஞர் என்பவர் ‘நவீன தமிழ்நாட்டின் சிற்பி’ என்பதை நாம் அறிய முடியும்.

## புதிய ஏற்பாடுகள்

வளர்ச்சிக் கோட்பாட்டில், பழைய தமிழ்நாட்டுக்கும் புதிய தமிழ்நாட்டுக்குமான கோடு அவரிடமிருந்துதான் தொடங்குகிறது. பழைய தமிழ்நாட்டில் போக்குவரத்து மக்களுக்கான சேவை கிடையாது. சாலை வசதிகள் கிடையாது. மக்கள் அதிகமாகப் புழங்கக்கூடிய இரு நகரங்களுக்கு இடையிலான தடங்களில் மட்டுமே போக்குவரத்து இருந்தது. சிற்றூர்களுக்கான போக்குவரத்து என்பது நினைத்துப் பார்க்க முடியாதது. பள்ளிகள், கல்லூரிகளின் கதவுகள் எளியோர்களுக்குத் திறக்கப்பட்ட நேரம், கிராமங்களில் இருந்து தொலைவில் உள்ள நகரங்களுக்கு மாணவர்கள் வந்து செல்வதற்குப் போக்குவரத்து அவசியமாக இருக்கிறது.

கலைஞர் போக்குவரத்துத் துறை அமைச்சராக இருக்கையில் முக்கியமான அந்தப் பொறுப்பினை, தனது கடமையாக ஏற்று நிறைவேற்றிக் காட்டுகிறார். கூடவே சிறுநகரங்களுக்கான சாலை வசதிகளையும், இணைப்புச் சாலை வசதிகளையும் உருவாக்கியதன் மூலம் போக்குவரத்தும் சிறு நகரங்கள் இணைப்பும் பள்ளி - கல்லூரி வாய்ப்புகளும் ஒருசேர புதிய தமிழ்நாட்டுக்கான ஏற்பாடுகளாக உருவாகின.

## திரைச் சவால்கள்

சமீபத்தில், திரைத்துறை நண்பர்கள் சிலருடன் உரையாடிக் கொண்டிருக்கையில், தமிழ்நாட்டின் கிராமங்களைக் குறிப்பாக 60 - 70 காலகட்டத் திரைப்படங்களை உருவாக்குவதில், தற்போது இருக்கும் சவால்கள் குறித்து அந்த உரையாடல் இருந்தது. அதில் அவர்கள் குறிப்பிட்டது, “மின்சாரக் கம்பங்கள் இல்லாத ஓர் ஊரைக் காட்சிப்படுத்துவது இப்போது சவாலாக உள்ளது” என்றனர். அது முற்றிலும் உண்மை.

இயக்குநர் அமீர் இயக்கிய ‘பருத்திவீரன்’ திரைப்படத்தின் முன்னோட்டக் காட்சியைப் பார்த்த கலைஞர், அந்தத் திரைப்படத்தில் ஒரு காட்சியில் கூட மின்கம்பம் இல்லாதது குறித்து அவரிடம் கேட்டு இருக்கிறார். “இப்படி ஒரு கிராமம் எங்கு இருக்கின்றது?” என வினவி இருக்கிறார்.” “இல்லை, நாங்கள் மின்கம்பத்தைத் தவிர்த்து விட்டுப் படம் எடுப்பதே சவாலாக இருந்தது” என அமீர் குறிப்பிட்டார்.

பழைய தமிழ்நாட்டின் அனைத்து ஊர்களுக்கும் மின் வசதி கிடையாது. ஆனால் 70 க்குப் பின்னர், கலைஞரின் ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட தமிழ்நாட்டின் அனைத்து கிராமங்களுக்கும் மின்வசதி கொண்டு வரப்படுகிறது. கலைஞரின் மூன்றாவது ஆட்சிக் காலத்தில் மின் இணைப்புப் பெறாத அனைத்து வீடுகளுக்கும் ஒரு மின்விளக்குத் திட்டம் அமல்படுத்தப்பட்டிருக்கிறது. கலைஞர் உருவாக்கிய புதிய தமிழ்நாட்டின் ஒவ்வொரு ஊரிலும், ஒவ்வொரு வீட்டிலும் மின்சார இணைப்பு புதிய வரலாற்றைக் கொண்டு வந்தது.

**கலைஞர் ஆட்சிக்குப் பிறகான தமிழ்நாட்டில்தான் அது உருவாகிறது. குறிப்பாக, வெளிநாட்டு நிறுவனங்களுக்கான ‘பிளேஸ்மென்ட்’ என்கிற அளவில் பல படிகள் முன்னேறி இருக்கிறது என்பதையும் உணரலாம்.**

## வேலைவாய்ப்புப் பிரிவு

1971 ஆம் ஆண்டில் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் அவருக்கு மதிப்புறு முனைவர் பட்டத்தை வழங்கியது. அப்போது அவரது உரை ‘பட்டம் பெற்றவர்களுக்கு வேலை வாய்ப்புகளைத் தேடித் தருவதற்கு பல்கலைக்கழகத்தில் தனிப்பிரிவு ஒன்றினை ஏற்படுத்துவது அவசியம் என்பதாக இருந்தது. பொதுத் துறையிலும், தனியார் துறையிலும் வேலைக்குத் தகுதி உடையவரைத் தேர்ந்தெடுக்கும்போது பல்கலைக்கழகத்தில் இந்தப் பிரிவினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்’ என்கிறார்.

மேலைநாடுகளில் கல்லூரியில் தேர்ச்சி பெறுவதற்கு முன்பாகவே அவர்களுக்கு வேலைக்கு உத்தரவாதம் அளிக்க நிறுவனங்கள் முன் வருகின்றன. அத்தகைய நிலை நம் நாட்டில் உருவாவதற்கு இன்னும் பல ஆண்டுகள் செல்லக் கூடும் என்ற போதிலும், இதற்கு உடனடியான தொடக்கம் காண வேண்டும் என்கிறார். கலைஞர் ஆட்சிக் காலத்துக்கு முன்பான தமிழ்நாட்டில் வேலை வாய்ப்புத் துறைக்கான பல்கலைக்கழகங்களில் தனி ஏற்பாடுகள் கிடையாது.

கலைஞர் ஆட்சிக்குப் பிறகான தமிழ்நாட்டில்தான் அது உருவாகிறது. குறிப்பாக, வெளிநாட்டு நிறுவனங்களுக்கான ‘பிளேஸ்மென்ட்’ என்கிற அளவில் பல படிகள் முன்னேறி இருக்கிறது என்பதையும் உணரலாம்.

## காலப் பகுப்பாய்வு

இப்படி தி.மு.கழக ஆட்சிக் காலத்துக்கு முன்னரான தமிழ்நாடு, தி.மு.கழக ஆட்சி காலத்துக்குப் பின்னரான தமிழ்நாடு எனப் பகுத்துப் பார்ப்பதும் பேசுவதும் இன்றைய அரசியல் சூழலில் அவசியமாக இருக்கிறது.

தி.மு.கழக ஆட்சியையும், முத்தமிழறிஞர் கலைஞரின் ஆட்சிக் கலையையும் புறந்தள்ளிப் பேசுபவர்கள் உருவாகக்கூடும் என அறியாதவரா அவர்? அதற்கும் எழுதி வைத்திருக்கிறார். “அவனவன் தன் நெஞ்சுக்குத் தனக்குத் தானே நீதி வழங்கிக் கொள்ள வேண்டும்” என்கிறார். புதிய தமிழ்நாடு, பழைய தமிழ்நாடு இரண்டையும் பகுத்துப் பார்த்து கலைஞர் பக்கம் நிற்பதே, நமது நெஞ்சு, நீதியின் பக்கம் நிற்பதற்கான சான்று.

## திராவிட இயக்க இதழ்கள் - ‘திருவிடம்’



திராவிட இயக்க அறிஞர்களில் ஒருவரான அர.திருவிடம் அவர்களால், 1972 ஜூன் 1 ஆம் நாள் முதல் வெளியிடப்பட்டு வந்த இதழ், ‘திருவிடம்’. திராவிட இயக்கக் கொள்கைகள், சுயமரியாதைச் சிந்தனைகள் போன்றவற்றுக்கு முக்கியத்துவம் அளித்து வந்த இந்த இதழ், வார இதழாக வெளிவந்தது. தொடக்கத்தில், திருவாரூரிலிருந்து வெளிவந்த இதழ், சில மாதங்களுக்குப் பிறகு சென்னையிலிருந்து வெளிவரத் தொடங்கியது.

திராவிட இயக்கம் சார்ந்த முன்னோடிகளின் படங்களை இந்த இதழ் தனது முகப்பு அட்டையில் தாங்கி வந்தது. தந்தை பெரியாரின் கருத்துகளை, இந்த இதழ் முதன்மைப் படுத்தியது. மேலும் சிறுகதைகள், கட்டுரைகள், கவிதைகள், மரபுப் பாடல்கள், ஆய்வுத் தொடர்கள் ஆகியவையும் இந்த இதழில் இடம்பிடித்தன.

மிக முக்கியமாக, ‘மந்திரமா தந்திரமா?’ என அறிவியல் விளக்கம் தந்து செய்முறை காட்டிய படைப்புகள் வெளிவந்தன. சாலை இளந்திரையன், கி.வீரமணி, சி.பி.சிற்றரசு, நெ.து.சுந்தர வடிவேலு, திருவாரூர் கே.தங்கராசு போன்றோரின் படைப்புகள் இதில் இடம்பெற்றிருக்கின்றன. நிறைய கோட்டோவியங்களுடன், பரிசுச்சீட்டு, குடும்ப நலத்திட்டம் போன்ற அன்றைய தமிழ்நாடு அரசின் செயல்திட்ட விளம்பரங்களும் காணப்படுகின்றன.

## :ப்ளாஷ்பேக்





பால.
சிவகுமார்

### சிறிய உரை!

1991 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் இன்றைய நம் கழகத் தலைவர் அன்றைய இளைஞர் அணிச் செயலாளர் அவர்களுக்கு நான் மரியாதை செய்தபோது எடுக்கப்பட்ட புகைப்படம் இது. ‘அலைகடல் அய்யா’ வெற்றிகொண்டான் அவர்கள் தலைமை வகிக்க, தளபதி அவர்கள் சிறப்புரை ஆற்றினார். தளபதியார் அவர்களும், அய்யா வெற்றி கொண்டான் அவர்களும் இடம்பெற்றிருந்த அந்தப் பொதுக்கூட்டத்தில், நானும் சிறிய உரை நிகழ்த்தியது இன்றும் பசுமையான நினைவாக இருக்கிறது.

**-பை-பாஸ் பால.சிவகுமார்,**
**70-வது வட்ட கழக செயலாளர்,**
**மதுரை மாநகர் மாவட்டம்.**


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் : youthwing@dmk.in

## கருவூலம்

### மாநகராட்சி மன்றங்களா மாநிலங்கள்?

**1963 ஆம் ஆண்டில் பிரிவினைத் தடைச் சட்டத்தை எதிர்த்து, அண்ணா மாநிலங்களவையில் பேசினார். அப்போதுதான் ‘மாநில சுயாட்சிக்கான முழக்கம்’ அண்ணாவின் பேச்சில் முதன்முதலாக சூசகமாக வெளிப்பட்டது. ‘‘நாட்டின் ஆதிபத்திய உரிமையை தி.மு.க எதிர்க்கவில்லை. கூட்டாட்சி செயல்படும் முறை மீதுதான் எங்களுக்குக் குறை. மாநிலங்களை டில்லி ஏதோ மாநகராட்சி மன்றங்கள் போல நடத்தி வந்திருப்பதாகக் கருத வேண்டியிருக்கிறது’’ என்றார் அண்ணா.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 380




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 28179191, 28179131